வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 18.06.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 197 | பக்கங்கள் : 16



## தமிழரின் அபிலாஷைகள் நிறைவேற டில்லியின் நிலையான ஆதரவு உறுதி

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இந்தியத் தூதுவர் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூன் 18

"அரசமைப்பின்13ஆவது திருத்தத்துக்கு அமைவாகவும், ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள்ளும் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் இலங்கையின் நல்லிணக்கத்துக்கு இந்தியாவின் நிலையான ஆதரவு இருக்கும்."

- இவ்வாறு இரா.சம்பந்தன் தலைமையிலான

15

# இந்தியாவின் கடல் பாதுகாப்பில் இலங்கை அரசாங்கம் அக்கறை காட்டவேண்டும்



### துறைமுக நகரத்திட்டத்தை அவதானிப்பதாகவும் இந்திய வெளிவிவகாரப் பேச்சாளர் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 18

இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு குறித்து இலங்கை அக்கறையுடன் செயற்படும் என எதிர்பார்ப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பக்ச்சி அரின்டம் நேற்று இந்தக் கருத்தை வெளியிட்டார்.

15

## சச்சிதானந்தத்திடம் 2 மணி நேரம் விசாரணை



யாழ்ப்பாணம், ஜூன் 18

சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனைக் கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாதத் தடைப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மாலை இரண்டு

15

## மூன்று வாரங்களின் பின் அரசடி முடக்கம் நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அரசடி கிராமம் கடந்த மூன்று வாரமாக தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரி

15

## வட மாகாணத்தில் நேற்று 62 பேருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.பரிசோதனைக்கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 41 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 62 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று

15

## ஹரின் எம்.பி வீட்டில் பொலிஸார் சோதனை

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் இல்லத்தை நேற்று பொலிஸார் சோதனையிட்டனர்.

வத்தளையிலுள்ள அவரது இல்லத்துக்கு பொலிஸார் வந்தனரெனவும், அங்கு கூட்டம் ஏதும் நடைபெறுகிறதா என

15

## 2,361 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 361 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்

15

## பயண கட்டுப்பாடு நீக்கம் குறித்து தீர்மானிக்க பல வாரங்கள் ஆகும்!

### பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் கூறுகிறது

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டை நீக்குவது குறித்து தீர்மானிக்க பல வாரங்களாகும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதியின் பின்னர் பயணக் கட்டுப்பாட்டை நீக்குவது தொடர்பாக எதிர்வரும் நாட்களில் கிடைக்கவுள்ள பி.சி.ஆர்.

15

## யாழில் மற்றொரு பெண் கொரோனாவால் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவருக்கு நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்

15




## யாழ். பல்கலை. மருத்துவபீடத்தின் ஆய்வுகூடத்துக்கு ரூ. 48 இலட்சம் பெறுமதியான ஆர்.என்.ஏ. இயந்திரம்

### புலம்பெயர் தமிழர் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட கொரோனா வைரஸ் பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான தானியங்கி ஆர். என்.ஏ பிரிப்பு இயந்திரம் ஒன்று புலம்பெயர் தமிழரான சுப்பிரமணியம் கதிர்காமநாதனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது!

கடையில் அன்றுதான் புதிதாக வேலைக்குச் சேர்ந்த பையனிடம் முதலாளி சொன்னார்,

'இந்தக் கடையைப் பொறுத்த வரையில் வருகின்ற வாடிக்கையாளர்கள் என்ன சொல்கின்றார்களோ அதுதான் சரி. அவர்களை மறுத்து ஏதும் சொல்லக் கூடாது. இதை மறந்து விடாதே' என்றார்.

சிறிது நேரம் சென்றது. கடைக்கு வருகின்ற எல்லோரும் எதுவும் வாங்காமல் செல்வதைப் பார்த்தார் முதலாளி.

பையனைப் பார்த்து, 'என்ன நடந்தது?' என்று கேட்டார்.

'வந்தவர்கள் எல்லோரும் இந்தக் கடையில் விலை ரொம்ப அதிகம் என்றார்கள். நானும் நீங்க சொன னபடியே அவர்களிடம், நீங்கள் சொல்வது உண்மை தான் என்றேன்' என்றான் அந்த அப்பாவிப் பையன்.

நேற்று முன்தினம் இந்தப் பத்தியில் கூட்டமைப்புக்கு புதிய தலைமைகள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தோம்.

கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக சம்பந்தனுக்கு அடுத்ததாக வரக்கூடிய தகுதி செல்வம் அடைக்கலநாதனுக்குத்தான் இருக்கிறது என்றும் தெரிவித்திருந்தோம்.

இதனைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டார்.

'என்ன ஐசே... நீர்தான் கதை செல்லுறதுக்கு சரியான ஆளா? என்றவர், உமக்கு நான் ஒரு கதை சொல்லட்டா என்றார்.

சரி அவரது கதையையும்தான் கேட்டுப்பார்ப் போமே என்று 'சரி சொல்லுமன்' என்றேன்.

ஓர் ஊரிலை இருந்த ஒரு பணக்காரர், பெரிய பங்களா ஒன்றை கட்டிமுடித்தார். பின்னர் தனது நண்பர்களை எல்லாம் அழைத்து விருந்து வைத்தார்.

விருந்துக்கு வந்த நண்பர்களை பங்களாவை சுற்றிக் காட்டிக்கொண்டிருந்தவர், பின் பக்கம் தோட்டப்பகுதிக்கு கூட்டிச் சென்றார்.

அங்கு மூன்று நீச்சல் தடாகங்கள் கட்டப்பட்டிருந்தன.

இதனைப் பார்த்த நண்பர்கள் கேட்டனர், 'அது என்ன மூன்று தடாகங்கள்?'.

அவர் பதில் சொன்னார்,

'ஒன்று வெந்நீரில் குளிக்க விரும்புபவர்களுக்கு. மற்றையது குளிர் நீரில் குளிக்க விரும்புபவர்களுக்கு.?'

எதற்கு இந்த மூன்றாவது? நண்பர்கள் கேட்டனர்.

அவர் சொன்னார், 'அது நீச்சல் தெரியாதவர்களுக்கு?'

நண்பர் ஏன் இந்தக் கதையைச் சொன்னார் என்று புரியாமல் கேட்டேன்.

இதற்கும் அந்த பத்திக்கும் என்ன சம்பந்தம்? என்று.

இவர் சொன்னார், இந்தப் பணக்காரர் மாதிரி முட்டாள்தனமாகத்தானே நீர் அந்தப் பத்தியில் செல்வம்தான் சரியான ஆள் எண்டு எழுதியிருக்கிறீர் என்றார் அவர்.

அட, இந்த ஊர்க்குருவியை முட்டாள் ஆக்கியிருக் கிறார். முட்டாள் என்றால் அடிமுட்டாளாக்கியிருக் கிறார் நண்பர்.

"ஏன் செல்வத்திற்கு என்ன குறை என்றேன்" பதிலுக்கு.

கூட்டமைப்பிற்கு யார் தலைவராக வருவது, யார் முடிவெடுப்பது என்பதையெல்லாம் யார் முடிவெடுக் கிறார்கள் என்று திரும்பிக்கேட்டார் நண்பர்.

இப்போது சம்பந்தன் இல்லையென்றால் சுமந்தி ரன் என்றேன்.

அது தெரியும் ஐசே, இவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும் எண்டு முடிவெடுக்கிறது யார் என்றார்? எனக்கு புரியவில்லை.

இந்த இலட்சணத்திலைதான் நீங்கள் மற்றவையைப் பற்றி விமர்சித்துக்கொண்டிருக்கிறீர்? என்றவர், கூட்டமைப்பு என்னசெய்யவேண்டும் எண்டு முடிவெடுக்கிறது இந்தியாதான் ஐசே என்றார்.

அவரே தொடர்ந்தார், சீன- சிறீலங்கா நட்புறவுக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் துணைத்தலைவரான செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப்பின்ர பேச்சாளராகவே வரமுடியயில்லை. இதுக்குள்ள நீர் அவரை பாராளுமன்ற குழுத்தலைவராக சிபார்சு செய்யிறீர். இவ்வளவுதான் உம்மட அரசியல் அறிவு என்று கோபமாக சொல்லிவிட்டு தொடர்பை துண்டித்துவிட்டார்.

அந்தக் கடையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட பையனின் மனநிலையில் இந்த ஊர்க்குருவி அப்போது நின்றுகொண்டிருந்தார்.

-ஊர்க்குருவி

# '13' திருத்தத்தின் அதிகாரங்கள் பறிப்பு; கைகட்டி வேடிக்கை பார்க்கவே முடியாது

## நீதிமன்றத்தை நாடுவோம் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஜூன் 18.

"அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தின் ஊடாக குறைந்தபட்ச அதி காரங்களே வழங்கப்பட்டன. இந்த அதிகாரங்கள் இப்போது பறிக்கப் படுகின்றன. இதனைக் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது."

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசி யக் கூட்டணியின் பங்காளிக் கட்சி யான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலை வர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரி வித்தார்.

"மாகாணத்துக்கான அதிகாரங் களை மத்திய அரசு பிடுங்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இது தமிழ் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. இது குறித்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர் வது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம்" என்றும் அவர் கூறி னார்.

யாழில் அவரது இல்லத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனாத் தொற்று நோய் காலகட்டத்தில் எல்லா நாடுகளும் முடக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு வேலைகளைச் செய் வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.



அண்மையில் மாகாண பாட சாலைகளைத் தேசிய பாட சாலைகளாக மாற்றும் வேலைத் திட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் மாகாண சபைகள் எல் லாமே இல்லாமல் உள்ள சூழ் நிலையில் மாகாண சபைத் தேர்தல் காலவரையின்றி பிற்போடப்பட்டி ருக்கின்ற சூழலில் மாகாண அதி காரங்களை திட்டமிட்டு அழிக்கப் பட்டு வருகின்றன. வடக்கு, கிழக் கில் இருக்கக்கூடிய பல முக்கிய மான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டி ருக்கின்றன.

இப்போது வடக்கு மாகாணத் தில் இருக்கக்கூடிய மாவட்ட வைத் தியசாலைகளில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு பொறுப்பேற்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப் பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வைத்தியசாலைகளை மத்திய அரசு கையகப்படுத்த முழு நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டு அவை நிறைவுபெற்றுள்ளன.

இலங்கை அரசு ஐ.நாவுக்கு இந் தியாவுக்கு தாங்கள் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவோம் மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவோம் எனக் கூறிக்கொண்டு - இப்போது உள்ள அதிகாரங்களை விட மேலதிகமான அதிகாரங்களை வழங்குவோம் எனக் கூறிக் கொண்டு இப்போது இருக்கக் கூடிய அதிகாரங்களையும் தொடர்ச் சியாகப் பறிக்கப்படுகின்ற நிலை யையே எங்களால் பார்க்கக் கூடிய தாவுள்ளது .

முக்கியமாக இந்த வைத்திய சாலைகளைப் பறிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது .யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஏற்க னவே மத்திய அரசின் கீழ் உள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட வைத்தியசாலை கள் அனைத்தையும் மத்திய அரசு கையகப்படுத்தியுள்ளது.

மத்திய அரசு தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்து உண் மையாகவே மாகாணத்திலுள்ள முற்றுமுழுதான அதிகாரங்களைப் பறித்தெடுத்து தமிழ் மக்கள என்ன காரணத்துக்காகப் போராடினார் களோ அதனைச் சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டு வருகின் றது" - என்றார். (இ - 03)



## உயிரிழந்து கரையொதுங்கிய டொல்பின்!

கொழும்பு, ஜூன் 18

நீர்கொழும்பு போரதோட் பகுதியில் டொல்பின் ஒன்று நேற்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

## எரிவாயு நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 18

நிர்ணயிக்கப்பட்ட அளவில் எரிவாயு நிரப்பப்படாது சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோரை ஏமாற்றிய குற்றச்சாட் டுக்கு அமைய இந்தச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாளிகா கந்த நீதிவான் நீதிமன்றத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபையால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறைந்த நிறையுடைய எரிவாயு சிலிண் டர்களை விற்பனை செய்த கொழும்பு -02 பகுதியைச் சேர்ந்த விற்பனை நிலையமொன் றுக்கும், அந்த விற்பனை நிலையத்துக்குச் சிலிண்டர்களை விநியோகித்த வத்தளைப் பகுதியிலுள்ள நிறுவனமொன்றுக்கும், லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கும் எதி ராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் 28ஆம் திகதி நடத்தப்படவுள் ளது. (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,561 பேர் கைது

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட் டில் மேலும் 1,561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குளியாப்பிட்டி பகுதியி லேயே பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் கண்டியில் 165 பேரும், மாத்தளையில் 137 பேரும் தனிமைப்படுத்தல் சட் டத்தை மீறியமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறாது, அத்தியாவசிய தேவை யைத் தவிர்த்து வீடுகளிலிருந்து வெளியில் செல்ல வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தி னார். (இ)

## பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மூன்று பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜூன் 18

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான ரன்மல் கொடித்துவக்கு, கித் சிறி ஜயலத் மற்றும் ரஜித ஸ்ரீ தம்மிந்த ஆகியோருக்கே இவ்வாறு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவர் ஓய்வுப் பெற்றமையால் இவர்களுக்கான பதவிய யர்வை பொலிஸ் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

# எரிபொருள் விலையை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலைகளை மீண் டும் குறைப்பதற்கு அரசு நட வடிக்கை எடுக்கும் என்று இரா ஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தபோது, ஊட கங்களுக்குக் கருத்துக் கூறு கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:-

"எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்ட காரணத்தை அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இந்த விடயத்தில் அரசில் உள்ள கட்சிகள் வெளியிடும் கருத்துக் களை அரசின் நிலைப்பாடாகக் கருதக் கூடாது. பஸில் ராஜபக்ஷ, அரசின் முடிவுகளில் செல்வாக் குச் செலுத்தக்கூடிய ஒரு நப ராக இருக்கின்றார். அவர் நாட் டில் இருந்திருந்தால் எரிபொருள் விலை அதிக ரிப்பை எதிர்த் திருப்பார்" - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu
18.06.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# சத்தம்போடுவதிலும் நேர்மை வேண்டும்!

அரசாங்கம் மாகாண சபை நிர்வாகத்தின் கீழுள்ள, ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தவுள்ளது. இதனை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளவுள்ளது. அதேபோன்று, மாகாண சபை நிர்வாகத்திலுள்ள சில வைத்தியசாலைகளையும் தேசிய வைத்தியசாலைகளாக தரமுயர்த்தவுள்ளது. இதன்மூலம் குறித்த பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள்மீது மாகாண சபைக்கு இருந்த அதிகாரம் இல்லாமல் போகின்றது. இது, அதிகாரப்பகிர்வை பலவீனப்படுத்தும் செயல், இது அரசியலமைப்பை அப்பட்டமாக மீறும் செயல் என்னும் அடிப்படையில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பை சேர்ந்த அரசியல்வாதிகள் ஆவேசப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று, கூட்டமைப்பின் கொள்கை தவறானது என்னும் அடிப்படையில், கூட்டமைப்பிலிருந்து வெளியேறி விக்னேஸ்வரனுடன் சங்கமித்த சுரேஷ் பிறேமச்சந்திரனும், இந்த விடயத்தை கண்டித்திருக்கின்றார். அதிகாரப் பகிர்வை அரசாங்கம் கேலிக்கூத்தாக்குவதாக சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார்.

இந்த விடயங்களை அவதானிக்கும்போது ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது, இந்த விடயத்தை கண்டிக்கும் தார்மீக தகுதி கூட்டமைப்பினருக்கு இருக்கின்றதா? மற்றவர்களுக்கு இருக்கின்றதா? முதலில் கூட்டமைப்பும் சரி, ஏனையவர்களும் சரி மாகாண சபையை ஓர் அரசியல் தீர்விற்கான அடிப்படையாக ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றனரா? பொது வெளியில் இதனை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றனரா?

மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னைக்காக கொண்டுவரப்பட்ட ஒன்று, ஆனால், அதனை இன்றுவரையில் தமிழ் மக்களின் நலனுக்காக முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மாகாண சபை முறைமையை, அன்றைய சூழலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஈழ தேசிய ஜனநாயக முன்னணியும் மட்டுமே தமிழர் தரப்பில் ஏற்றுக்கொண்டன. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணியை தேர்தலில் போட்டியிடுமாறு கோரப்பட்டபோதும், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில்தான் ஈ.பி.ஆர்.எல்.எவ் அன்றைய சூழலில் தேர்தலில் போட்டியிட்டது. அன்று அவர்கள் போட்டியிட்டு மாகாண சபைக்கு சட்டரீதியான அந்தஸ்தை கொடுக்காதிருந்தால், இன்று மாகாண சபை என்று ஒன்று இருந்திருக்காது.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே மாகாண சபை முறைமைய பலவீனப்படுத்தவேண்டும் என்பதிலேயே சிங்கள தரப்புக்கள் கண்ணும் கருத்துமாக இருந்தன. தமிழ் தலைவர்களும் மாகாண சபையை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டியதை அவர்கள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டனர். மாகாண சபையின்கீழ், இருக்கவேண்டிய அதிகாரங்களை மத்தியின்கீழ் கொண்டுசென்றனர். பிரேமதாஸ இதனை திட்டமிட்டு மேற்கொண்டார். மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்க அதிபர், அவரின்கீழ் பிரதேச செயலாளர், அதன்கீழ் கிராம சேவையாளர்கள் என்னும் அதிகார அடுக்கு ஒன்றை உருவாக்கி, தமிழர்களில் ஒரு பகுதியினரையே, மாகாண சபைக்கு எதிராக பணியாற்றுவதற்கான சூழலை பிரேமதாஸ உருவாக்கினார். இதிலிருந்து கற்றுக்கொண்டுதான், ஒவ்வோர் ஆட்சியாளர்களும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் மாகாண சபையை பலவீனப்படுத்தும் நோக்கில் விடயங்களை மேற்கொள்ளுகின்றனர்.

ஆனால், தமிழர் தரப்பிலுள்ள தவறு என்ன? மாகாண சபையை உச்சளவில் பயன்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு செயல்படுவதில்லை. எப்போது கிடைக்கும் என்று தெரியாத தீர்வுகளை எதிர்பார்த்து, கையில் இருப்பதை முறையாக கையாள தெரியாதவர்களாகவே தமிழ் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். கடந்த ஆட்சிக் காலத்தில் மாகாண சபையை பலப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் முற்றிலும் சாதகமாக இருந்தது. ஆனால், கூட்டமைப்போ புதிய அரசியல் யாப்பு என்னும் மாய மானுக்கு பின்னால் சென்று, அனைத்தையும் வீணாக்கியது. இப்போது, மாகாண சபைகளின் கீழுள்ள பாடசாலைகள் மத்தியின்கீழ் செல்வதாக கூக்குரல் எழுப்புகின்றனர்.

# ஜெனரல் சிறில் ரணதுங்க

அனந்த பாலகிட்ணர்

**1981**ஆம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தியாளனாக சேர்ந்த காலப்பகுதியில் எனக்கு தரப்பட்ட முதலாவது பணியாக, குருநகர் பகுதியல் முகாமிட்டிருந்த யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தலைமையகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி செய்திகளைப்பெறுவதாக இருந்தது.

காலஞ்சென்ற எனது செய்தி ஆசிரியர் கே.ஜி. மகாதேவா எனக்கு இராணுவ ரீதியான செய்தி தொடர்புகளை வைத்திருக்க பணித்திருந்ததோடு, அங்கிருந்து எடுக்கப்படும் செய்திகளை மிக அவதானத்துடன் கையாளுமாறும் கேட்டுக்கொண்டிருந்தார். ஏனெனில், அக்காலகட்டத்திலேயே வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டமும் படிப்படியாக ஆரம்பமாகியிருந்தது.



எனவே, 'கரணம் தப்பினால் மரணம்' என்ற நிலையிலேயே முற்றிலும் ஒரு செய்தியாளனாக குருநகரிலிருந்து இயங்கிய யாழ்ப்பாணம் இராணுவ முகாமுடன் தொடர்புகளை வைத்திருந்தேன்.

அன்று இன்றிருப்பதுபோல யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகம் என்று, யாழ்ப்பாணத்திலோ அல்லது பலாலியிலோ இராணுவ தலைமையகம் பெருமளவு இராணுவத்தினருடன் காணப்பட்டிருக்கவில்லை.

**குருநகர் முகாம்**

குருநகரில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதிக்கென கட்டப்பட்டிருந்த புதிய வதிவிட கட்டிடத்திலேயே யாழ்ப்பாண இராணுவ முகாம் காணப்பட்டிருந்தது. அச்சமயம் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தளபதியாக பிரிகேடியர் தரத்தில் இருந்தவரே ஜெனரல் சிறில் ரணதுங்க. இருதினங்களுக்கு முன்னர் காலமான ஜெனரல் சிறில் ரணதுங்க யாழ்ப்பாண தளபதியாக அன்று பணியாற்றியபோது அவர் பிரிகேடியர் தரத்தில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னாளில் இலங்கையில் முதலாவது முப்படைகளின் பிரதானியாக ஜெனரல் தரத்தில் சிறில் ரணதுங்க பதவி உயர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் குருநகர் முகாமில் அக்காலத்தில் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக சந்தேகத்துக்கிடமானவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மிக முக்கிய சந்தேகநபர்களாக வண.பிதாக்கள் சிங்கராசா, சின்னராசா மற்றும் பின்னாளில் ஆயுததாரிகளால் கொலையுண்ட ரஜனி திரணகமவின் சகோதரியான நிர்மலா நித்தியானந்தன் அவரின் கணவர் மு. நித்தியானந்தன் ஆகியோர் அன்று பிரிகேடியர் தரத்திலிருந்த ஜெனரல் சிறில் ரணதுங்கவின் நேரடி கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

எனவே, அக்காலகட்டத்திலேயே எனது யாழ்ப்பாண இராணுவ முகாமுடனான செய்தித்தொடர்பாடலும் அடிக்கடி இடம் பெறத்தொடங்கியது. ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகை சார்பாக என்னை மட்டுமே செய்திகளை சேகரிக்க ஜெனரல் சிறில் ரணதுங்கவின் இராணுவ செயலாளராக பணியாற்றிய மேஜர் தரத்திலிருந்த குலதுங்க அனுமதித்திருந்தார். நாளடைவில், தேசிய பத்திரிகைகளின் யாழ். செய்தியாளர்களாக பணியாற்றிய 'வீரகேசரி'யின் காசி நவரட்ணம், 'தினபதி' பத்திரிகையின் கே. அரசரட்ணம், அன்றைய யாழ்ப்பாண ஆங்கில பத்திரிகையான 'சற்றடே றிவியு' செய்தியாளரான சேரன் ருத்திரமூர்த்தி ஆகியோர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

**பிரிட்டிஷ் பாரம்பரியம்**

அன்று பிரிகேடியர் தரத்திலிருந்த ஜெனரல் சிறில் ரணதுங்க, 1950ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் சேர்ந்து பிரிட்டிஷ் இராணுவ பாரம்பரியங்களுக்கு அமைவாகவே தனது பணிகளை மேற்கொண்டிருந்தார். தமது பொறுப்பிலிருந்த சந்தேக நபர்களை கண்ணியமாக நடத்தியிருந்தார். அவர்களுக்கென விசேட அறைகள் ஒதுக்கப்பட்டு ஒருதடவை என்னை வண. சிங்கராயர், வண. சின்னராசா ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைகளுக்கு சென்று பார்வையிடவும் அனுமதித்திருந்தார்.

1981ஆம் ஆண்டு டிசம்பரில் குருநகர் முகாமில் நத்தார் கரோல் பண்டிகை கொண்டாடப்பட்டது. அப்போது காவலிலிருந்த வண. பிதாக்கள் மற்றும் நிர்மலா நித்தியானந்தன், அவரது கணவர் நித்தியானந்தன் ஆகியோரும் அந்த பண்டிகையில் பங்குபற்றியிருந்தனர்.

**தங்கத்துரையுடன் உரையாடல்**

ஜெனரல் சிறில் ரணதுங்க ஒருதடவை என்னிடம் பேசியபோது, சந்தேகநபர்கள் கைது செய்யப்படலாம். ஆனால், அவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்படவேண்டும். அப்பாவி பொதுமக்கள் ஒருபோதும் துன்புறுத்தப்படலாகாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்.

தமது சுயசரிதை நூலில் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்த தங்கத்துரையை தாம் கைதுசெய்து நீண்டநேரம் உரையாடினாரெனவும், அப்போது அவரது நியாயங்கள் சரியானவை என்றும், அவர் தேர்ந்தெடுத்த ஆயுதப்போராட்டமே வன்முறையாக இருந்ததென்றும் குறிப்பிட்டிருந்தார்.

தமக்கு முன்னர் யாழ்ப்பாண முகாம் தளபதியாக இருந்த பிரிகேடியர் 'புள் வீரதுங்க' யாழ்ப்பாணத்தில் பணியாற்றியபோது இளைஞர்களை மிக மோசமாக நடத்தியமையே இராணுவத்தினர்மீது யாழ்ப்பாண மக்கள் வெறுப்படைய முக்கிய காரணமாக இருந்ததெனவும் ஜெனரல் சிறில் ரணதுங்க குறிப்பிட்டிருந்தார்.

இராணுவத்தினர் தமது கடமைகளை மேற்கொள்ளும்போது பொதுமக்கள் விடயத்தில் மிக அவதானமாக இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டையும் ஜெனரல் சிறில் ரணதுங்க கொண்டிருந்தார். அவரது பதவிக்காலம் யாழ்ப்பாணத்தில் முடிவடைந்ததன் பின்னரே யாழ்ப்பாணத்தில் யுத்தக்கெடுபிடிகள் அதிகரித்து, அந்தகாரச்சூழல் வலுவடைய ஆரம்பித்ததென்பது குறிப்பிடத்தக்கது. ■

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூன் - 18 வெள்ளிக்கிழமை**
பிலவ வருடம் - ஆனி 04
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அஷ்டமி




**மேடம்**
உங்களிடம் யாரும் கோபப்படமுடியாதபடி நடந்து கொள்வீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பதால் நன்மை வரும். நண்பர்கள் தொடர்பான விஷயங்களில் சச்சரவு வேண்டாம்

**இடபம்**
செல்வாக்கு மேலோங்கும். உற்சாக மன நிலை நிலவும். பிரியமுள்ளவர்கள் கோபம் தீர்ந்து உங்களுடன் வந்திணைவார்கள். நீண்டநாள் பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உறவினர்களுடன் இருந்த சில்லறை சண்டைகள் சரியாகும். முந்தைய முயற்சி ஒன்றின் விளைவாக நன்மை ஏற்படும்.

**கடகம்**
உங்களுக்கு கீழ்பணிபுரிவோர் உங்களை அனுசரித்து செல்வார்கள். பயம் நீங்கும். நிதானமாகப் பேசினால் பிரச்னை வராது. நண்பர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்னைகள் அகலும்.

**சிம்மம்**
கடன் தொகை செலுத்தமுடியாபதபடி ஏற்பட்ட சிறு சிரமம் நீங்கும். அக்கம்பக்கத்தினருடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். மற்றவர்கள் பிரச்னைகளில் தலையிட வேண்டாம்.

**கன்னி**
வருத்தங்கள் நீங்குவதால் மனதிலும் செயலிலும் கலகலப்பு வரும். பக்தியுணர்வு அதிகரிக்கும். கணவருக்குப் பணவரவு உண்டு. பணியில் நேர்மையான உழைப்பால் பாராட்டுப் பெறுவீர்கள்.

**துலாம்**
கணவன், மனைவிக்கிடையில் இருந்த பிரச்னைகள் நீங்கும். நண்பர்களுக்கு இடையே இருந்த மனத்தாங்கலை நீக்குவீர்கள். வீடு வாங்குவதற்கு எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும்.

**விருட்சிகம்**
பலநாட்கள் நீடித்த சண்டை நீங்கும். குடும்பத்தில் கலகலப்பு வரும். அக்கம்பக்கத்தினருக்கு உதவிகரமாக இருந்து போற்றப்படுவீர்கள். சந்தோஷம் தரும் செய்தி காலையிலேயே வந்து சேரும்.

**தனுசு**
வருமானம் திருப்தி தரும். சிறிய கனவு ஒன்று நனவாகும். எதிர்ப்புகளை சமாளிக்கும்படியான பயிற்சியும் மனதிடமும் வரும். மனம்விட்டுப் பேசுவதன் மூலம் மனஸ்தாபம் ஒன்று நீங்கும்.

**மகரம்**
உடல் நலம் குறித்த கவலைகள் ஒரு வழியாக நீங்கும். நிதானப்போக்கு இருப்பதனால் வெறுப்பு வராமல் கவனமாக இருங்கள். பேச்சினால் பிரச்னையில் மாட்டிக்கொள்ள வாய்ப்புள்ளது.

**கும்பம்**
வீண்பழி வராதபடி காத்துக்கொள்ளுங்கள். கவலை குறையும். மற்றவர்கள் வம்பில் மறந்தும் தலையிடாதிருந்தால் நல்லது. தந்தையின் வாழ்வில் ஒரு நன்மை ஏற்படக்காரணமாவீர்கள்.

**மீனம்**
செலவுகள் ஏற்பட்டாலும் அவற்றால் சிரமங்கள் இருக்காது. தாய் மூலம் நன்மைகள் வரும். அவரின் கவலைகள் தீரும். நீண்டகால நண்பர்கள் உதவுவார்கள். கற்ற கல்வி உதவி செய்யும்.

# ஏழு பேரையும் நீண்டகால பரோலில் விடுவிக்க தமிழக அரசு முடிவு?

## இலங்கையர்கள் குறித்து தீர்மானிப்பதில் சிக்கல்



சென்னை, ஜூன் 18

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகியுள்ள ஏழு பேரையும் நீண்ட நாள் பரோலில் அனுப்ப தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இருந்த போதிலும் இதில் சம்பந்தப்பட்ட இலங்கைப் பிரஜைகள் விவகாரம்தான் கேள்விக் குறியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்திற்கு முக ஸ்டாலின், இவர்களின் விடுதலை தொடர்பாக கடிதம் எழுதி ஒரு மாத காலம் ஆன நிலையில் இந்த புதிய வழி குறித்து ஆலோசனை நடைபெற்று வருவதாக தெரிய வந்துள்ளது. 2018ஆம் ஆண்டு அதிமுக அரசின் பரிந்துரைப் படி 7 பேரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் அவருக்கு கடிதம் எழுதினார். 7 பேர் விடுதலை விவகாரம் தொடர்பாக ஏற்கனவே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித் குடியரசு தலைவருக்கு எடுத்துக் கூறினார்.

முப்பது ஆண்டுகளாக சிறையில் உள்ள இவர்களின் விடுதலை குறித்த சீர்திருத்த நிலையை கருத்தில் கொண்டு நீண்ட கால பரோல் நடவடிக்கைக்கு சிறை அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை பிரஜைகளின் நிலை குறித்த கேள்விகளுக்கு பதில் கிடைத்த பிறகு இதில் ஒரு முடிவு எட்டப்படலாம் என்று தெரிய வந்துள்ளது.

பேரறிவாளன் (வேலூர்), நளினி (சென்னை) மற்றும் ரவிச்சந்திரன் (மதுரை) ஆகியோரை தவிர மீதம் உள்ள முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் இலங்கை பிரஜைகள். நளினியின் கணவர் முருகன். மற்றும் ஜெயக்குமாரின் மனைவி இந்திய பிரஜை. அவரும் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு பிறகு 1999ஆம் ஆண்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இதில் எந்த ஒரு முடிவும் எடுக்காமல், உச்ச நீதிமன்றம், தாமதம் குறித்து மேற்கோள் காட்டிய பிறகு ஆளுநர் இது தொடர்பான ஆவணங்களை குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்தார். இது மிகவும் சிக்கலான விவகாரம். மத்திய அரசின் ஆலோசனைப்படி குடியரசு தலைவர் நடந்து கொள்கிறார். இங்கு எந்தவிதமான அரசியல் சாசன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. நீதித்துறை இது தொடர்பாக முடிவு எடுக்கும் வரை மனித நேய அடிப்படையில், அவர்களுக்கு நீண்டகால பரோல் வழங்குவது ஒன்று மட்டுமே நம் கையில் உள்ள ஒரே வழி என்று மூத்த அதிகாரி தெரிவித்தார்.

உயர்மட்ட அளவில் நடைபெற்ற ஆலோசனையை உறுதிப்படுத்திய நம்பத்தகுந்த வட்டாரங்கள், பல ஆண்டுகளாக உள்துறை அமைச்சக அறிக்கைகளை மேற்கோள் காட்டி, குற்றவாளிகளை பரோலில் அனுப்புவதில் அச்சுறுத்தல் இல்லை என்பதை கூறியுள்ளனர்.

மேலும் இந்த முடிவு முழுக்க முழுக்க மாநில அரசின் அதிகாரங்களுக்கு கீழே உள்ளது.

இதற்கு முன்பு அவர்களில் சிலர் காவல்துறையினர் உதவியோடு அல்லது உதவி இல்லாமல் பரோலில் வெளியே வந்துள்ளனர். அதில் பிரச்னை ஏதும் இல்லை. அவர்களின் நடத்தை சான்றிதல் மூலம், குற்றவியல் நோக்கங்களை யாரும் கூற முடியாது. முப்பது ஆண்டுகள் சிறை வாசம், பலர் தனிமைச் சிறையில் உள்ளனர். அவர்கள் இப்போது ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ அனுமதிக்க வேண்டும், "என்று மூத்த அதிகாரி கூறினார்.

4 இலங்கை பிரஜைகள் தொடர்பாக எழும் கேள்விகள் இன்னும் நிலுவையில் உள்ளன. அவர்களை இலங்கைக்கு அனுப்ப முடியாது. அவர்களுக்கு அகதிகள் சான்று வழங்கப்படும். அவர்கள் பரோலில் இலங்கை அகதிகள் முகாமுக்கு சென்று இயல்பு வாழ்க்கையை வாழ அனுமதிக்க முடியும் என்று அவர் கூறினார். தனது மகனின் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய 2019 ஆம் ஆண்டில் பரோல் வழங்கப்பட்ட பயஸின் வழக்கை சுட்டிக் காட்டி, வேலூர் சிறையில் உள்ள ஓர் அதிகாரி, பரோல் காலத்தில் எந்த பிரச்னையும் இல்லை என்று கூறினார்.

இந்த வழக்கின் போது வழக்கறிஞராகவும், பின்னாளில் சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பொறுப்பு வகித்த, ஓய்வு பெற்ற நீதிபதி கே. சந்துரு இந்த 7 நபர்களின் விடுதலைக்கான முட்டுக்கட்டையை உடைக்க மாநில அரசுக்கு நீண்ட கால பரோல் சாத்தியமானது தான். எளிமையான வழியும்கூட" என்று கூறினார்.

மத்திய அரசு மற்றும் ஆளுநர் தரப்பில் ஏற்படும் கால தாமதம் குறித்து கேள்வி எழுப்பிய போது, அவர்கள் தண்டனை அனுபவித்த இந்திய குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பின் (Code Of Criminal Procedure) கீழ், 7 பேரும் குறைந்த காலத்திற்கு மன்னிப்பு பெற தகுதியுடையவர்கள்.

இதற்கான தீர்வு மிகவும் எளிதாக இருக்கிறது. ஆனால் இந்த வழக்கில் முக்கியமானது சட்டமல்ல என்று அவர் கூறினார்.

# டில்லியில் ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு பிரதமர் மோடியுடன் நேற்று மாலை பேச்சு

புதுடில்லி, ஜூன் 18

தமிழக முதலமைச்சராக பதவி ஏற்ற பிறகு முதல் முறையாக நேற்றுக் காலை புதுடில்லி சென்றுள்ள மு.க. ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, புதுடில்லி பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



நேற்று மாலை 5 மணிக்கு பிரதமர் நரேந் திர மோடியை சந்தித்து பல் வேறு கோரிக் கைகள் அடங்கிய மனுவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்தார்.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும், தமிழகத்திற்கு கூடுதல் கொரோனா தடுப்பூசி மருந்துகளை அளிக்க வேண்டும், எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமான பணிகளை விரைவில் தொடங்க வேண்டும், ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட சில கோரிக்கைகளை நேரில் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

இதையடுத்து இன்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்திக்க உள்ளார்.

இந்த பயணத்தின்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் அவரது மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் முதலமைச்சரின் தனிச்செயலாளர் உமாநாத் ஐ.ஏ.எஸ்., முதன்மை செயலாளர் உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ். ஆகியோரும் டில்லி சென்றுள்ளார்கள்.



# ‘இலங்கை மண்ணில் தோற்றோர்’ ஆங்கில நூல் ஐந்து மொழிகளில்

வவுனியா, ஜூன் 18

வன்னி மண்ணின் பிரபல்யமான ஆங்கில எழுத்தாளரான யோகராசா அச்சுதனால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட “இலங்கை மண்ணில் தோற்றோர்” எனும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டது.

ஜேர்மன், பிரெஞ்சு, டச்சு, போர்த்துகீசு, பொளிஸ் மற்றும் இத்தாலிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள குறித்த நூல் உலகின் பிரபல்யமான இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

பிரபல சிங்கள எழுத்தாளரான புண்ணியகாந்தி விஜயநாயக்கவினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ‘காத்திருக்கும் பூமி’ எனும் நூலை விமர்சித்து எழுதப்பட்ட இந்நூல் சமூக முன்னேற்றத்திற்காக இலங்கை மக்கள் எதிர் கொண்ட தனிமனித மற்றும் சமூக பிரச்னைகளை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து இலங்கை ஆங்கில இலக்கிய வளர்ச்சிக்கு வலுச்சேர்த்து பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

யோகராஜா அச்சுதன் ‘பாழாய்ப்போன வாழ்க்கை’, ‘அதிசய குணப்படுத்தல்’ மற்றும் ‘அப்பாவே’ போன்ற நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள் எனும் தொனிப்பொருளில் எழுதப்பட்ட ஆங்கில கவிதைகளின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாசகர் மனதில் இடம்பிடித்த இலங்கை தமிழ் எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் நால்வர் கைது!

கிளிநொச்சி, ஜூன் 18

தர்மபுர பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன் தினம் புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று டிப்பர்களும் அதன் சாரதிகள் இருவரும், பொலிஸாரை உளவு பார்த்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடைபெற்ற பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளர் என தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(அ)

# காலை வாரினார் ரணில் சஜித் அணியில் ஜோன்!

கொழும்பு, ஜூன் 18

**“பொதுத்தேர்தலில் போட்டியிட இருந்தேன். எனினும், தேசியப்பட்டியல் நியமனம் என கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். இதன்படி தேசியப்பட்டியலில் எனது பெயர் முதலாவதாக பெயரிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது ஏமாற்றிவிட்டார்.**



தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்படாது என ரணில் அறிவித்திருந்தார். எனினும், அதற்கு எதிரான வகையில் தற்போது முடிவெடுத்துள்ளார். அரசியலே எனக்கு வெறுத்துவிட்டது. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் எதிர்காலத்தில் பார்க்கலாம்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால் சஜித் அணியில் இணைவது தொடர்பில் தாம் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தான் விரைவில் தீர்மானம் ஒன்றை எடுப்பார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(அ)

# ‘கோப்’ குழு விசேட கூட்டத்தை 22 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 18

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) விசேட கூட்டத்தை எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடத்துவதற்கு அதன் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தீர்மானித்துள்ளார்.

குழு உறுப்பினர்களுக்காக நடத்தப்படும் இந்தக் கூட்டத்தில் கோப் குழுவினால் 09வது பாராளுமன்றத்தில் இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள 02 அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பாய்வு செய்யப்படவுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்படவேண்டிய நிறுவனங்கள் யாவை என்பது குறித்தும் இக்கூட்டத்தில் தீர்மானிக்க எதிர்பார்த்திருப்பதாக அக்குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கொவிட் 19 சவாலுக்கு மத்தியில் கோப் குழுவின் கூட்டங்களை ஒன்லைன் முறையில் (online) சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுப்பது குறித்தும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இதற்கமைய சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கணக்காளர் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரை மாத்திரம் குழுவின் முன்னிலையில் அழைப்பது மற்றும் ஏனையவர்களை ஒன்லைன் முறையின் கீழ் இணைத்துக் கொள்வது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்படவுள்ளது.

(அ)

# எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக சஜித் தரப்பினர் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 18

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக கினிகத்தேனையில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர், இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பதாதைகளை ஏந்தியவாறு எதிர்ப்பில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், அரசாங்கம் பொதுமக்களுக்கு எரிபொருள் நிவாரணத்தை வழங்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

(அ)

# குழந்தைகள் சுற்றுச்சூழலை அனுபவிக்க இடமளியுங்கள்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஜூன் 18

முன்பள்ளியை போட்டித்தன்மை மிகுந்த கல்வி வழங்கும் மற்றொரு பாடசாலையாக மாற்றாமல் குழந்தைகளுக்கு சுற்றுச்சூழலை அனுபவிக்க இடமளியுங்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரி மாளிகையில் வைத்து தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2500 ரூபாய் கொடுப்பனவை பெற்றுக்கொடுக்கும் ‘குரு அபிமானி’ தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோர் இதன்போது ஆரம்பகால குழந்தை பருவ கல்வி குறித்த தேசிய கொள்கையை பிரதமருக்கு வழங்கினர்.

குரு அபிமானி தேசிய வேலைத்திட்டத்தை மையமாகக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி ஆகியோரால் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள சுபீட்சத்தின் முன்பள்ளி கட்டுமானத்திற்கான 25 இலட்சம் ரூபாய் மற்றும் 1500 முன்பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம் பாட்டுக்காக 6 இலட்சம் ரூபாய் நிதி வழங்கலும் பிரதமரின் தலைமையில் இடம்பெற்றது.

முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு -

பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு அடித்தளமாக விளங்கும் முன்பள்ளி ஆசிரியர்களை பாராட்டும் நிகழ்வில் கலந்து கொள்ள கிடைத்தமை குறித்து பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பெற்றோருக்கு அடுத்தபடியாக குழந்தைகளுக்கான அடித்தளம் முன்பள்ளிகளிலேயே போடப்படுகிறது.

முன்பள்ளி இன்று குழந்தை மேம்பாட்டு மையம் என்றும் அழைக்கப்படுகிறது. அப்படி கூறுவதற்கு ஒரு காரணம் உள்ளது. அதாவது, முன்பள்ளியில்தான் குழந்தைகள் முறையான பாடசாலை கல்விக்கு வழிநடத்தப்படுகின்றனர்.

எனவே, இந்த உலகில் ஒரு குழந்தை பிறக்கும்போது, அந்தக் குழந்தைக்கு உலகைப் பார்ப்பதற்கான முதல் அடித்தளம் முன்பள்ளியில் போடப்படுகின்றது என்பதை புதிதாக கூறவேண்டியதில்லை.

முன்பள்ளிகள், பராமரிப்பு மையங்கள் என்ற இந்த பெயர்களைக் கொண்ட நிறுவனங்களை கல்வித்துறையில் மிக முக்கியமான பகுதிகளாக அடையாளம் கண்டுள்ளோம்.

அதுமட்டுமின்றி, சர்வதேச தரங்களுக்கு ஏற்ப முன்பள்ளிகளை இயக்குவதற்கான வழிமுறையையும் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையில் சேர்த்துள்ளோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே அந்த நோக்கத்திற்காக முன்பள்ளிகளுக்கான இராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்படுத்தினோம். இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த அவர்கள், இந்த நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வார் என்பதை நாங்கள் அறிவோம்.

முழு நாடும் கொரோனா தொற்று நோயை எதிர்கொள்ளும் நேரத்தில் முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. பெரும் பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளின் பெற்றோரிடமிருந்து குறைந்த பணத்துடன் பராமரிக்கப்படுகிறார்கள். தற்போது அப்பணம் கிடைப்பதில்லை. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, இந்த முன்பள்ளி ஆசிரியரை ஒரு நிரந்தர சம்பளம் பெறும் தொழில் முறை நிலைக்கு கொண்டு வர முயற்சிக்கிறோம்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சாத்தியம் குறித்து சமீபத்தில் கல்வி அமைச்சர் மற்றும் செயலாளருடன் விவாதித்தோம். இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பரிந்துரைகளை வழங்கியவுடன் படிப்படியாக பாடசாலைகளை மீண்டும் திறப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது-என்றார்.

# அரசின் பெருந்தேசியவாத நிலைப்பாட்டுக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் அரசுக்குள் போராட வேண்டும்

## மருத்துவமனைகள் சுவீகரிப்பு தொடர்பில் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன் 18

13ஆம் திருத்தத்தின்படி மாகாணசபைகளுக்கு உரித்தான மருத்துவமனைகளை மத்திய அரசு சுவீகரிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை மேற்கொண்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்பதை அமைச்சரவையில் சுட்டிக் காட்டினேன் என அமைச்சர் டக்லஸ் தேவானந்தா கூறியுள் ளமை பாராட்டுக்குரியது. ஆனால், அதற்கான காரணமாக தமிழ் மக்கள் தனது கட்சிக்கு வாக்களித்து, தனக்கு அரசியல் பலத்தை தராமையே எனவும் அவர் மேலும் கூறியுள்ளமை கவலைக்குரியது.

உண்மையில் ராஜபக்ஷ அரசின் "அதிகார பரவலாக்கலுக்கு" எதிரான பெருந்தேசியவாத நிலைப்பாடே இதற்கு காரணம். எனவே அமைச்சர் இதுபற்றி தனது அரசுக்குள்ளே விடாமல் போராட வேண்டும். அவருக்கு அரசுக்குள்ளே இருக்கும் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள், இது தொடர்பில் ஆதரவளிக்க வேண்டும் இது எம் கோரிக்கை என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் விவரித்து கூறியுள்ளதாவது,

அமைச்சரவை தீர்மானத்தின்படி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளை, மத்திய அரசு சுவீகரிப்பது தொடர்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தின்படி, கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, மேல் மாகாண வைத்தியசாலைகளும் பறிக்கப்படும். ஆகவே இவை பற்றி வடக்கில், கிழக்கில், மலையகத் தில்



இருந்து அரசுக்குள் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் சமகாலத்தில் எதிரணியில் இருந்து அரசு பக்கம் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பிக்களும் தமது எதிர்ப்புகளை காட்ட வேண்டும்.

உண்மையில், 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யும்படியே, இந்திய அரசாங்கம், ஐ.நா. மனித உரிமை ஆணையம், ஐரோப்பிய பாராளுமன்றம் என்பவை கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை திரும்ப, திரும்ப கூறுகின்றன.

13ஆம் திருத்தத்தை முழுக்க அமுல் செய்வதை நிறுத்தியது ஒருபுறமிருக்க, இப்போது இருப்பதையும் பறிக்கும் செயன்முறையை இந்த அரசு மேற்கொள்கிறது. இது நிச்சயமாக, இந்திய அரசுடனான உறவு, செப்ரெம்பரில் அடுத்து வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையரின் வாய்மொழி அறிக்கை, ஐரோப்பிய பாராளுமன்ற ஜி.எஸ்.பி. விவகாரம் ஆகியவற்றில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அமைச்சர் தனது ஜனாதிபதிக்கு எடுத்துக் கூற வேண்டும். பார்க்கப் போனால், இந்த ஜனாதிபதிக்கு உள்நாட்டு அரசியல் சட்டமும் தெரியவில்லை. இலங்கை பற்றிய வெளிநாட்டு நகர்வுகளும் தெரியவில்லை போல் எமக்கு தெரிகிறது.

13ஆம் திருத்தத்தின்படி மாகாணசபைகளுக்கு உரித்தான மருத்துவமனைகளை மத்திய அரசு சுவீகரிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை மேற்கொண்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்பதை அமைச்சரவையில் சுட்டிக்காட்டினேன் என அமைச்சர் டக்லஸ் தேவானந்தா கூறியுள்ளமை பாராட்டுக்குரியது.

ஆனால், அதற்கான காரணமாக தமிழ் மக்கள் தனது கட்சிக்கு வாக்களித்து, தனக்கு அரசியல் பலத்தை தராமையே எனவும், அது தமிழ் மக்களின் தீர்க்கதரிசனமற்ற தீர்மானமே எனவும் அவர் மேலும் கூறியுள்ளமை கவலைக்குரியது.

உண்மையில் ராஜபக்ஷ அரசின் "அதிகார பரவலாக்கலுக்கு" எதிரான பெருந்தேசியவாத நிலைப்பாடே இதற்கு காரணம். எனவே அமைச்சர் இதுபற்றி தனது அரசுக்குள்ளே விடாமல் போராட வேண்டும். அவருக்கு அரசுகுள்ளே இருக்கும் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள், இது தொடர்பில் ஆதரவளிக்க வேண்டும்.

இந்நாட்டில், அதிகார பரவலுக்காக தமிழ் மக்கள் சிந்திய இரத்தம், கொடுத்த விலை என்பவை சில அமைச்சரவை தீர்மானங்களால் சுலபமாக பறிபோக கூடாது. இந்த உண்மை, அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் முழு அமைச்சர்கள், அரை அமைச்சர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர்கள், எம்.பிக்கள் ஆகியோருக்கு தெரிய வேண்டும்.

# தமிழர் ஒரே நிலைப்பாட்டில் இல்லையெனில் அதிகாரங்கள் பறிபோவதைத் தடுக்க முடியாது

## ரெலோ பேச்சாளர் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 18

"தமிழ்த் தரப்பு ஒருமித்த நிலைப்பாட்டில் இல்லாவிட்டால் அதிகாரங்கள் பறிபோவதை தடுக்க முடியாது" என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிதிருப்பதாவது:

"மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் பறிக்கப்படுவது தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. மாகாணசபைக்கு சொந்தமான வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கம் கையகப்படுத்தும் அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எமக்குரிய அதிகாரங்கள் பறிக்கப்படுவதாக தமிழர் தரப்புகளில் இருந்து குற்றம் சாட்டி அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சி நிரல் ஆரம்பமோ முடிவோ அல்ல. முன்னைய காலங்களில் இருந்தே தொடர்ந்தும் இப்படியான அதிகாரப் பறிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தி மெதுவாக மாகாண சபைக்குரிய பாடசாலைகளை கையகப்படுத்த மத்திய அரசு ஆரம்பித்திருந்தது. அதேபோல அபிவிருத்தி என்ற போர்வையில் காணி நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூராட்சி சபையின் அனுமதிகள் இல்லாமலே அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன. இப்போது மாகாணசபை வைத்தியசாலைகளை கையகப் படுத்துவதற்கான அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இப்படியாக ஒவ்வொரு நிகழ்வுகளும் நடக்கின்ற போது மாத்திரம் அதற்கு எதிராக குரல் கொடுக்கும் நடவடிக்கையையே நாம் செய்கிறோம். தீர்க்கதரிசனமாக, நாங்கள் போராடி இரத்தம் சிந்தி பெற்ற ஆகக்குறைந்த அதிகாரங்கள் கூட எங்கள் கைகளை விட்டு பறிபோவதை தடுப்பதற்கான, வரும் முன் காக்கும் நடவடிக்கையாக ஒருமித்த வேலைத் திட்டம் அல்லது ஒருமித்த நிலைப்பாடு தமிழ் தரப்பிடம் இல்லை.

தேர்தல் அரசியலை நோக்கிய கட்சி பூசல்களை முன்வைத்து செயற்படுவதனால் இருப்பவற்றை தக்கவைத்துக்கொள்ள முடியாது. நாம் இரத்தம் சிந்திப் போராடி பெற்ற, ஆகக் குறைந்த அதிகாரங்கள் இவை. நம்முடைய அரசியல் தீர்வாக மாகாணசபையின் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வை நாம் கருதவில்லை. அதில் எல்லோரும் தெளிவாகவே உள்ளோம். ஆனால், இருப்பவற்றை இழந்துவிடாமல் காப்பது இனத் தலைவர்களின் கடமை.

இதன் அடிப்படையில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு தமிழர் தரப்பு வர வேண்டியது காலத்தின் கட்டாயம். இதை பல தடவை நாம் வலியுறுத்தி இருந்தாலும் தத்தமது பதவி, கட்சி அரசியல் நலன்களுக்காக அதற்கான பேச்சுக்களை முன்னெடுக்கும் போது சில தரப்புக்கள் தயக்கம் காட்டி வருவது வருத்தத்துக்குரிய விடயம். அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கு ஒருமித்த நிலைப்பாட்டில் எதிர்வினையாற்றாது விட்டால் எவ்வித பலனுமற்ற மாகாண சபை என்று எலும்புக்கூடு தான் எங்களுக்கு மிஞ்சப் போகிறது.

அதையும் தாண்டிய கொள்கை ரீதியாக சமஷ்டி அல்லது சுயாட்சி அலகு முறையான தீர்வு திட்டத்துக்கான பேச்சு வார்த்தைகளும் அதற்கான ஆதரவுகள் சர்வதேச மட்டத்தில் வலுப்பெற்று வந்தாலும் ஏற்கனவே அரசியல் யாப்பிலும் எமது கைகளிலும் இருப்பதை இழந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். அது ஒரு தீர்வாக அல்லாவிட்டாலும் இருக்கும் உரிமையை இழக்காமல் இருப்பதற்காகவே ஒருமித்த நிலைப்பாடு அவசியமாகிறது. பட்டுவேட்டி கோரிக்கை வைத்து இருக்கிறோம் என்பதற்காக இடுப்பில் இருக்கும் துண்டு மெதுவாக உருவ படுகின்ற பொழுது அதை தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட யதார்த்தம்.

ஆகவே, தமிழர் தரப்பாகிய நாங்கள் ஒவ்வொரு சம்பவத்திற்கும் பதில் அறிக்கை அல்லது பதில் நடவடிக்கை எடுப்பதை விட தீர்க்கதரிசனமாக இந்த அதிகாரங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நமக்குள்ளே ஒருமித்த நிலைப்பாட்டின் அடிப்படையில் எதிர்வினையாற்றுவதன் மூலம்தான் மத்திய அரசாங்கத்தின் தலையீடுகளையோ அல்லது திட்டமிட்ட அதிகார பறிப்புகளையோ தடுத்து நிறுத்த முடியும்.

கொரோனா சூழ்நிலை இருப்பதனால் நேரடியான சந்திப்புகள் சாத்தியமில்லாத சூழல் நிலவுகிறது. மிக விரைவில் மெய்நிகர் இணையவழி ஊடாகவேனும் எப்படியான ஒருமித்த வேலைத்திட்டத்தை செயல்படுத்தலாம் அல்லது செயல்படுத்த முடியாது என்ற ஆராய்வுக்கான கலந்துரையாடலுக்கு தமிழ் தேசிய பரப்பில் செயலாற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி இணைந்து கொள்ள கோருகிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் டக்ளஸின் கூட்டத்தில் செய்தியாளர்க்கு அனுமதி மறுப்பு!

வடமராட்சி, ஜூன் 18

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகளுக்கு நடத்திய கூட்டத்தில் செய்தி சேகரிக்க செய்தியாளர்களுக்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

ஆனால், செய்தியாளர்களுக்கு அமைச்சர் அனுமதி மறுக்கவில்லை என்றும் மருதங்கேணி பொலிஸாரே அனுமதி மறுத்தனர் என்றும் அமைச்சரின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் நேற்று இந்தக் கூட்டத்தில்,

உழவு இயந்திரம் மூலம் கரைவலை இழுத்து தொழில் செய்வதற்கான அனுமதி, வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கடல் அட்டை பிடிக்க வெளியாருக்கு தடை விதித்தல், இலைகுழை பயன்படுத்தி மீன் பிடிப்பதை தவிர்த்தல் தொடர்பில் பேசப்பட்டன என்று கட்டைக்காடு கடற்றொழில் கூட்டுறவு சங்க தலைவர் கூறினார்.

இந்தக் கூட்டம் நிறைவடைந்த பின்னர் கரைவலை சம்மாட்டிமாரும், அமைச்சரும் கூடிப் பேசியிருந்தனர் என்று அறிய வந்தது. ஆனால், அங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து உடனடியாகத் தெரிய வரவில்லை.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் சுகாதார விதிகள் எவையும் உரிய முறையில் பின்பற்றப் படவில்லை என்றும் அதற்கான ஏற்பாடுகளும்கூட செய்யப்பட வில்லை என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# வாழ்வாதாரம் இழந்தோருக்காக யாழ். வணிகர் கழகம் உலருணவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

பயணத் தடையால் யாழ். மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு வழங்குவதற்கென ஒரு தொகை உலருணவுப் பொருட்களை யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தது யாழ். வணிகர் கழகம்.

யாழ். வணிகர் கழகத்தின் நிர்வாகம் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனிடம் நேற்று இந்த நிவாரண பொதிகளை கையளித்தது.

இந்த நிவாரணப் பொதிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் தலா 50 பொதிகள் என்ற அடிப்படையில் 750 பொதிகள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

# இந்தியாவின் ‘டெல்டா’ கொரோனா தொற்றுடன் இலங்கையில் சமூகத்திலிருந்து ஐவர் அடையாளம்

## மருத்துவர் சந்திம ஜீவந்திர தகவல்

**கொழும்பு, ஜூன் 18**

**இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் அதிவீரியம் கொண்ட டெல்டா (பி.1.617.2) கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஐவர் கொழும்பு, தெமட்டகொடைப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**



ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தனது ருவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் குறித்த ஐவரும் சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி டெல்டா திரிபுடன் கூடிய தொற்றாளர்கள் இலங்கையில் சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

கடந்த முறை அடையாளம் காணப்பட்ட பி. 117 வைரஸ் பிரிவை விடவும், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள பி.1.617.2 என்ற வைரஸ் 50 வீதம் அதிக வீரியம் கொண்டது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் இந்த வைரஸ் பரவும் அபாயம் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக டெல்டா கொரோனா திரிபினால் பாதிக்கப்பட்ட இருவர் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டிருந்தனர். ஆனால், அவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த நிலையிலேயே அந்தத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதேவேளை, பிரிட்டனின் அல்பா கொரோனா வைரஸ் திரிபு தொற்று உறுதியான 8 பேர் காலி, மட்டக்களப்பு, கொழும்பு 06, கொழும்பு 08 மற்றும் கொழும்பு 10 ஆகிய இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவர் சந்திம ஜீவந்தர மேலும் கூறியுள்ளார். (இ)

# வடக்கு வைத்தியசாலைகளை அரசுக்கு வழங்கவே முடியாது!

## ஆளுநருக்கு அவைத் தலைவர் சிவஞானம் கடிதம்



யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய சுகா தார நியதிச் சட்டத்துக்கு அமைவாக, மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசிடம் கையளிக்க முடியாது என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் தெரிவித்தார்.

இந்த விடயத்தையும் சுட்டிக்காட்டி வடக்கு மாகாண ஆளுநருக்கு விரைவில் கடிதம் அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாணத்துக்கு உட்பட்ட 9 வைத்தியசாலைகளை மத்திய அரசு வசமாக்கும் தீர்மானத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட பொது வைத்தியசாலைகள் இதன் ஊடாக மத்திய அரசு வசமாகவுள்ளன.

இது தொடர்பில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரான சீ.வீ.கே.சிவஞானத்திடம் கேட்டபோது,

“எமது மாகாண சபை சுகாதார நியதிச் சட்டத்தை நிறைவேற்றியிருந்தது. அந்தச் சட்டத்தில் இந்த வைத்தியசாலைகள் தெளிவாக எங்களுக்குரியன என்று சொல்லப்பட்டுள்ளது.

எமது மாகாணத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு தன் வசப்படுத்த முடியாது.

குறிப்பிட்ட வைத்தியசாலைகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய விரும்பினால் அதற்குரிய நிதியை மாகாணத்துக்கு மத்திய அரசு வழங்கட்டும்.

இந்த விடயங்களைக் குறிப்பிட்டு வடக்கு மாகாண ஆளுநருக்கு விரைவில் கடிதம் அனுப்பவுள்ளேன்” - என்றார். (இ-3)



# யாழ். நகரின் வெள்ள வடிகாலில் வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள வெள்ள வடிகாலிருந்து வெடிக்காத நிலையில் எறிகணை (ஷெல்) ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை யாழ். மாநகர பணியாளர்கள் துப்பரவுப் பணியை மேற்கொள்ளும்போது எறிகணையை கண்டு அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் எறிகணையை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஸ்ரான்லி வீதிக்கு அண்மையில் செல்லுகின்ற இதே பிரதான வெள்ள வடிகாலில் துபபுரவுப் பணியின்போது விஷப் பாம்புகள் வெளிவந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 200 வருடங்கள் பழமை வாய்ந்த

# கொழும்பு டீ சொய்சா கட்டடம் புதன் இரவு சரிந்து விழுந்தது!



கொழும்பு, ஜூன் 18

கொழும்பின் மலே வீதியில் உள்ள 200 வருடங்கள் பழமையான டீ சொய்சா கட்டடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு சரிந்து விழுந்துள்ளது.

கொழும்பு டீ சொய்சா கட்டடம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது.

குறித்த கட்டடம் 200 ஆண்டுகள் பழமையானது என்றும், சில வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தின் உரிமையாளர் இதற்கு முன்னர் கட்டடத்தை இடிக்க அனுமதி கோரியிருந்த போதும், தொல்பொருள் திணைக்களம் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டடம் சரிந்து விழுந்ததில் எவ்வித உயிர்ச்சேதமோ, காயங்களோ ஏற்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். (இ)

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான

# வாகன இறக்குமதி தீர்மானத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 18

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யும் அரசின் தீர்மானத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க இவ்வாறு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நேற்று தாக்கல் செய்துள்ளார்.

227 சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யும் அரசின் தீர்மானத்தால் அரசமைப்பு மீறப்படுகின்றது எனத் தீர்ப்பளிக்கும்படி குறித்த மனுவில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.



நாடு பல்வேறு அனர்த்தங்களைச் சந்தித்துள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக 227 சொகுசு வாகனங்களை அரசு இறக்குமதி செய்ய முயற்சிக் கின்றது எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலாளர், அமைச்சரவை உறுப்பினர்கள், இலங்கை வங்கி, சுங்கப் பணிப்பாளர், ஏற்றுமதி - இறக்குமதி கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் உட்பட 31 பேர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (இ)




**தீவிரவாத செயல்பாடுகள் மீது எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அதேபோன்ற நடவடிக்கைகளை அனைத்து புலனாய்வுத்துறைகளும் பின்பற்றின. இந்திய உளவுத்துறை மூலம் இலங்கையில் உள்ள கடற்படைக்கும் இது பற்றிய தகவல் பகிரப்பட்டது. ஆயுத கடத்தலில் இலங்கை அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதா என்ற விசாரணையும் முடுக்கி விடப்பட்டது என்று உள்துறை அதிகாரி தெரிவித்தார்.**

# இந்தியா, இலங்கை கடற்படைகளை அலறச்செய்த தொலைபேசி அழைப்பு

எம்.ஏ. பரணிதரன்

தி ஃபேமிலிமேன் சீசன் 2' என்ற பெயரில் சமீபத்தில் வெளியான ஓ.டி.டி. தொடர் ஒன்றில் இடம்பெற்ற சில காட்சிகளைப் போல, இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு ஆயுதங்கள் கடத்தி வரப்படுவதாக தமிழ்நாட்டுக்கு வந்த இரண்டு தொலைபேசி அழைப்புகள், இந்திய, இலங்கை கடற்படைகளை கதிகலங்கச் செய்திருக்கின்றன.

தி ஃபேமிலிமேன் - இரண்டாம் பாகம் வெப்சீரிஸ், சமீபத்தில் அமேசன் தளத்தில் வெளியானது. புனைக்கதை என கூறப்பட்டாலும், அந்த தொடரில் இடம்பெற்ற சில காட்சிகள், இலங்கை உள்நாட்டுப் போரின்போது தமிழீழத்துக்காக போராடியவர்களின் உயிர் தியாகத்தை இழிபடுத்தும் வகையிலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை ஆயுதக்குழுவினராகவும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்புடன் தொடர்புடைய அமைப்பாகவும் சித்தரிக்கப்படுவதாக சர்ச்சை எழுந்தது.

அந்த தொடரில் நாயகி, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐயுடன் தொடர்புடைய இந்திய நபருடன் வேதாரண்யத்தில் இருந்து கள்ளத்தோணியில் இலங்கை கடலோர பகுதிக்குச் சென்று அங்கு இருந்து வெடிகுண்டுகள், துப்பாக்கிகளை தமிழ்நாட்டுக்கு கடத்தி வருவது போல காட்சிகள் இடம்பெற்றிருக்கும்.

அத்தகைய ஓர் ஆயுத கடத்தல் நடக்கப்போவதாக வெளிநாட்டு கைப்பேசி எண்ணில் இருந்து இந்தியாவுக்கு சில தினங்களுக்கு முன்னர் எச்சரிக்கை அழைப்புகள் வந்ததால் இரு நாட்டு கடற்படையினரும் தீவிர விழிப்புடன் கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். இரவு, பகலாக இரு நாட்டுப்படையினரும் ரோந்துப் பணியை வழக்கத்தை விட அதிகமாக மேற்கொண்டனர்.

இதற்கிடையே, இந்த அழைப்புகளின் பின்னணியை தமிழ்நாடு காவல்துறையின் தீவிரவாத செயல்பாடுகளை கண்காணிக்கும் கியூ பிரிவு அதிகாரிகள் விசாரித்துள்ளனர். இரு நாட்டு கடற்படை, ஆயுத கடத்தல், தீவிரவாத செயல்பாடு தொடர்புடைய விவகாரம் என்பதால் இந்த விவகாரத்தை இந்திய உள்துறையும் உன்னிப்பாக கவனித்து வந்தது.

இது குறித்து இந்திய உள்துறை உயரதிகாரிகளிடம் பேசியபோது, கடந்த 12ஆம் திகதி வெளிநாட்டு கைப்பேசி எண்ணில் இருந்து இலங்கையில் இருந்து பேசுவதாகக் கூறி மதுரை திடீர் நகர காவல் நிலையத்துக்கு அழைப்பு வந்தது. அதில், இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த நசீர், அமீன், பராகத்துல்லா ஆகியோர் ஏகே 47 ரக துப்பாக்கிகளை இலங்கையில் இருந்து கடத்திக் கொண்டு மீன்பிடி படகில் இந்தியா வருவதாக மறுமுனையில் பேசிய நபர் கூறினார். பின்னர் மீண்டும் சில மணி நேரம் கழித்து அதே நபர் காவல்நிலையத்தை தொடர்பு கொண்டு, இந்தியாவுக்கு வரும் மூவருக்கும் அந்த ஆயுதங்களை கொடுத்தது இலங்கை கடற்படை அதிகாரிகள் தான் என்றும் கூறி இணைப்பை துண்டித்தார்.

மிகவும் தீவிரமாக கருதப்பட வேண்டிய தகவல் இது என்பதால் இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை, தமிழக கடலோர காவல் படை, மத்திய உளவுத்துறையை தமிழ்நாடு காவல்துறையினர் எச்சரித்தனர்.

தீவிரவாத செயல்பாடுகள் மீது எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அதேபோன்ற நடவடிக்கைகளை அனைத்து புலனாய்வுத்துறைகளும் பின்பற்றின. இந்திய உளவுத்துறை மூலம் இலங்கையில் உள்ள கடற்படைக்கும் இது பற்றிய தகவல் பகிரப்பட்டது. ஆயுத கடத்தலில் இலங்கை அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதா என்ற விசாரணையும் முடுக்கி விடப்பட்டது என்று உள்துறை அதிகாரி தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்திடம் ஏதேனும் எச்சரிக்கை குறிப்பு இந்தியாவில் இருந்து வந்ததா என்று கேட்கப்பட்டது. ஆனால், அத்தகைய தகவல் தங்களுக்கு வரவில்லை என்று இந்திய தூதரகம் கூறியது.

மறுபுறம் தமிழ்நாட்டுக்கு நேரடியாக வராமல் கேரளா வழியாக ஆயுதங்கள் கடத்தப்பட்டு வரலாம் என்ற சந்தேகத்தின்பேரில் கேரள காவல்துறையும் எச்சரிக்கப்பட்டது. இதனால் தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களின் எல்லை மாவட்டங்களில் உள்ள சோதனைச்சாவடிகளில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்த விவகாரத்தில் இலங்கை காவல்துறையின் செய்தித்தொடர்பாளர் டி.ஐ.ஜி. அஜித் ரோஹண, இந்த எச்சரிக்கை தகவல் தொடர்பாக இன்ரர்போல் காவல்துறையிடம் மேலதிக குறிப்புகள் தங்களுக்கு வரவில்லை என்று தெரிவித்தார்.

முன்னதாக, இரண்டு சிங்கள மொழிபேசும் இலங்கையர்கள் மற்றும் 23 பேர் தூத்துக்குடிக்கு சட்ட விரோதமாக படகில் வந்து பின்னர் அங்கிருந்து மதுரையில் உள்ள தொழில்பேட்டையில் தங்கியிருப்பதாக வந்த தகவலின் அடிப்படையில் அவர்களை தமிழ்நாடு கியூ பிரிவு காவல்துறையினர் கடந்த 10ஆம் தேதி கைது செய்தனர்.

அவர்கள் கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி மூன்று ஃபைபர் படகுகள் மூலம் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு வந்ததாக தெரிய வந்ததால், அவர்களுக்கும் மதுரை காவல் நிலையத்துக்கு வந்த மர்ம தொலைபேசி அழைப்புக்கும் தொடர்பு உள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டது. பிடிபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையின் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் காவல்துறையின் சந்தேகத்தை வலுப்படுத்தியது.

இதற்கிடையே, தமிழ்நாடு காவல்துறையின் தீவிரவாத செயல்பாடுகளை கண்காணிக்கும் கியூ பிரிவினர், மதுரை காவல் நிலையத்துக்கு கடந்த 12ஆம் திகதி வந்த மர்ம அழைப்புகளின் பின்னணியை விசாரித்தனர்.

அதில், வெளிநாட்டு செல்பேசி எண்ணில் இருந்து காவல் நிலையத்தை தொடர்பு கொண்டு பேசிய நபர், ராமநாதபுரத்தை சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது. பனைக்குளத்தைச் சேர்ந்த தாஜூதீன், பஹருல் அமீன், அன்வர் ராஜா, ஷேக் அலாவுதீன், ஹூசேன் ஆகியோர் அதே பகுதியில் உள்ள ஐந்து சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து அங்கு தகர கொட்டகை போட்டுள்ளதாகவும், இது பற்றி நூருல் அமீன் மூலம் உள்ளூர் பத்திரிகையில் செய்தி வெளியிட்டதாகவும் தெரிய வந்தது.


இதனால் கோபம் அடைந்த தாஜூதீன், பஹருல் அமீன் உள்ளிட்ட ஐந்து பேர், நசீர் குறித்தும் அவரது மகன் பற்றியும் உள்ளூர் வட்ஸ்அப் குழுவில் அவதூறான தகவல்களை பரப்பி வந்ததாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பான புகார் ராமநாதபுரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் நிலுவையில் இருந்துள்ளது. இந்த பின்னணியில் நசீர், நூருல் அமீன், பரக்கத்துல்லா ஆகியோரை தீவிரவாதிகளாக சட்ட அமலாக்க அமைப்புகளிடம் சிக்க வைக்க தாஜூதீன், பஹருல் உள்ளிட்ட ஐந்து பேர் திட்டமிட்டே ஓர் ஆயுத கடத்தல் போலி தகவலை கைப்பேசி வாயிலாக பரப்பியுள்ளனர் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது என்றும் இந்திய உள்துறை அதிகாரி தெரிவித்தார்.

வழக்கமாக உள்நாட்டுக்குள்ளே சில இடங்களைக் குறிப்பிட்டு வெடிகுண்டு உள்ளது, ஆயுத கடத்தல் நடக்கிறது என தவறான தகவல்களை விஷமிகள் பரப்புவார்கள். ஆனால், இம்முறைதான் இலங்கையில் இருந்து அந்நாட்டு கடற்படை உதவியுடன் இந்தியாவுக்கு ஆயுத கடத்தல் நடப்பதாக தவறான தகவல் பரப்பியுள்ளனர். இவர்களின் செயல்பாட்டால், தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளின் உளவு அமைப்புகள் மற்றும் கடற்படைகளும் அதிர்ச்சியடைந்திருந்தன.









“மன்னார் கடலில் இருபது பாவித்து, கழிக்கப்பட்ட பஸ்களை இலங்கை அரசாங்கம் அமிழ்த்திய நடவடிக்கைக்கு எதிராக இந்திய, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவ சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன. அதற்கு அவர்கள் கூறும் காரணம், நிறைய மீன்வளங்களை அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற் றொகுதி கவர்ந்து விடும். இதனால் இந்தியாவில் மீன் வளம் குறையும். இது சிறுபிள்ளைத்தனமான காரணமாக தெரிந்தாலும், அதற்குப் பின்னாலுள்ள காரணம் வேறு...”

# கடலின் அடியில் போடப்படும் வாகனங்களின் உலோகக்கூடுகள் சுற்றுச் சூழலுக்கு உகந்தவையா?

ஏ.எம். றியாஸ் அகமட்



உலகெங்கும் பாவித்து, ஒதுக்கப்பட்ட அல்ல கழிக்கப்பட்ட தரையிலோடுகின்ற வாகனங்கள், ரயில் பெட்டிகள், கப்பல்கள், யுத்த தாங்கிகள், கடற் பகுதிக்கு கப்பல்களில் எடுத்துச் செல்லப்பட்டு, செயற்கையாக முருகைக் கற்பாறைகள் வளர்வதற்காகவும், மீன்களின் குடித்தொகையை அதிகரிப்பதற்காகவும் அமிழ்த்தப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை, நியூயோர்க்கில் பாவித்து ஒதுக்கப்பட்ட2500 க்கும் மேற்பட்ட நிலக்கீழ் ரயில்பெட்டிகள், அத்திலாந்திக் சமுத்திரப் பகுதிகளில் அமிழ்த்தப்பட்டிருக்கின்றன. இது உலகம் முழுவதும் நெடுங்காலமாக செய்யப்படும் ஒரு நடைமுறையாகும். இதன் மூலம் மீன்கள், சிலந்தி ரேற்றாக்கள், முருகைக் கற்பாறைகள், அதனை நம்பிய உயிரினங்கள், மற்றும் கடற்தாவரங்கள் வளர்ந்து, நிலைத்துநிற்கக்கூடிய ஒரு சூழற்றொகுதியை உருவாக்குகின்றன.

நடத்தைச் சூழலியலின் (Behavioural Ecology), உணவு சூழலியலில் (Ecology of feeding) இந்த அமிழ்க்கப்பட்ட வாகனங்கள், முக்கியமான பங்கை வகிக்கின்றன. எப்படி ஒரு இரைகொல்லி விலங்கானது, இரைகளைக் கொல்வதற்கான திறன்களை அவைகளின் கூர்ப்புப் பொறிமுறைகளில் விருத்தி செய்துகொண்டிருக்கின்றனவோ அதே போன்று இரைகளும், இரைகொல்லிகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான, அவைகளை அடையாளம் காண்பதில், பிடித்துக்கொள்வதில் கடினங்களை ஏற்படுத்தல் போன்ற திறன்களை சமாந்தரமாக விருத்திசெய்துகொண்டிருக்கின்றன. இதற்கு இந்த அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகுதி உதவுகின்றன. அவைகள் ஒழிந்து கொள்வதற்கும், தப்பித்துக்கொள்வதற்கும் பாரிய பங்காற்றுகின்றன.

அதே வேளை, ஆழங்களைப் பொறுத்து சிறிய புற்கள், அல்காக்கள் பிளாந்தன்கள் சேரும்போது, தாவரவுண்ணி, ஊனுண்ணி, அனைத்துமுண்ணி போன்ற விலங்குகளின் உயிரியல் பன்மைத்துவம் அதிகரிக்கும்போது உணவுகளின் அளவும் அதிகரிக்கின்றன.

ஒழிந்துகொண்டு மற்ற உயிரினங்களையும் வேட்டையாடுகின்றன. வேகமாக நீந்தி உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத, நீரோட்டத்தினால் இலகுவில் அடித்துச் செல்லப்படக்கூடிய உயிரினங்களுக்கும் இந்தச் சூழற்றொகுதி ஒரு வரப்பிரசாதமாகும். இந்த அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகுதியினால் வளர்ச்சி வீதம் அதிகரித்து மீன்களின் குடித்தொகையும், மற்ற விலங்குகளின் குடித்தொகையும் அதிகரிக்கும்.

அதேபோன்று நடத்தைச் சூழலியலின், இனப்பெருப்பெருக்கச் சூழலியலிலும் (Ecology of reproduction), இடவாதிக்க சூழலியலிலும் (Ecology of space) முக்கிய பங்காற்றக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. விலங்குகள் தங்களுக்கான ஆதிக்க இடங்களையும் (territories), வீட்டு வீச்சு இடங்களையும் (home range), அதிபாவனை இடங்களையும் (core area) உருவாக்கிக் கொள்ளுகின்றன. வளங்களுக்கான பங்கீடுகளில் (partitioning resources) ஆரோக்கியத்தன்மை ஏற்பட்டு போட்டியும் குறைக்கப்படுகின்றன.

மேலும், பாதுகாப்பளிக்கக்கூடிய, உற்பத்திகூடிய மறைவிடங்களை உருவாக்குவதன் மூலம், இந்த அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகுதியானது, புணரும், இனப்பெருக்க, உணவு, பல்நோக்கு ஆதிக்க பரப்புக்களை ( mating, breeding, feeding, and multi-purpose territories) உருவாக்குகின்றன. அத்துடன் நீரோட்டத்தினால் அடித்துச் செல்லப்படாது, மீன்களின் முட்டைகளை ஒட்டிவைத்து, முட்டைகள் குஞ்சுகளாய் விருத்தியாவதற்கும் உதவுகின்றன.

அத்துடன் இந்த குஞ்சுகளுக்கும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பளிக்கின்றன. இந்தச் சூழற்றொகுதியின் மறைவிடம் காரணமாக பெற்றார் கவனிப்புக்கு (parental care) சக்திச் செலவு குறைவாக செய்யப்படுகின்றன. மேலும் தங்களுடைய இணைகைளைத் தெரிவு (mate selection) செய்வதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. இதனால் விலங்குகளின் தப்பிப் பிழைப்பதற்கான வாய்ப்புகளும், இனப்பெருக்க வெற்றியும் (Reproductive success), வளர்ச்சி வேகமும் (growth rate) அதிகரிக்கின்றன.

மன்னார் கடலில் இருபது பாவித்து, கழிக்கப்பட்ட பஸ்களை இலங்கை அரசாங்கம் கடலில் அமிழ்த்திய நடவடிக்கைக்கு எதிராக இந்திய, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவ சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன. அதற்கு அவர்கள் கூறும் காரணம், நிறைய மீன்வளங்களை அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகுதி கவர்ந்துவிடும். இதனால் இந்தியாவில் மீன்வளம் குறையும். இது சிறுபிள்ளைத்தனமான காரணமாக தெரிந்தாலும், அதற்குப் பின்னாலுள்ள காரணம் என்பது, இந்த பஸ்கள் அவர்களது கடல்அடித்தள இழுவை வலைகளை (bottom set trawler nets) சேதமாக்குவதுடன், இலங்கை மீன்வளங்களை கவர்ந்துகொள்வதிலும், அழிப்பதிலும் அந்தப் பிரதேசத்தில் அவர்களுக்கு பாரிய தடைகளாயிருக்கும் என்பது எல்லோராலும் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும்.

பொதுவாக, கழிக்கப்பட்ட பொருட்களை கடலில் வீசுவது நல்லதல்ல. குறிப்பாக உலோகப் பொருட்கள், இவை கடலில் கரையக்கூடியன. பாரமான உலோகங்கள், அவற்றின் நியம அளவைவிட கடற்றொகுதியில் அதிகரிக்கும்போது, உணவுச் சங்கிலிகளின் மூலம், மனிதர்களையும், மற்றைய விலங்குகளையும் அடைந்து, அவர்களின் ஆரோக்கியத்திற்கு தீமை விளைவிக்கும். ஆனால், நன்மைகளையும், தீமைகளையும் ஒப்பிடும் போது, இங்கே நன்மைகளின் அளவு அதிகரிக்க வேண்டுமானால், கடலில் வாகனங்கள் அமிழ்த்தப்படுவதற்கு முன், அந்த வாகனங்களிலுள்ள, பொலித்தீன், பிளாஸ்ரிக்கிலான சக்கரங்கள் (டயர்கள்), இருக்கைகள், மேலுறைகள், பட்டிகள் போன்றவை கவனமாக அகற்றப்பட வேண்டும். அத்துடன் தீங்கு செய்யக்கூடிய உலோகங்களும் அகற்றப்பட்டு, துப்பரவு செய்யப்பட்டு, கடல் சார் உயிரியல் காரணிகள் கவனத்திற்கொள்ளப்பட்ட பின்னர், உலோகக் கூடாகவே கடலில் போடப்படவேண்டும்.

**கட்டுரையாளர்: சிரேஷ்ட விரிவுரையாளர் தென்கிழக்கு பல்கலைக்கழகம்.**

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை - 6
வினாத்தாள் I, II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

**34.** பின்வரும் கூற்றுக்களில் எப்போதும் உண்மையான கூற்று எது?


1. கடின முயற்சி செய்தால் தோல்வி கிடைக்கும்.
2. மாணவர்கள் அமைதியாக இருக்க வேண்டியதன் காரணம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்காக
3. நான்கு வருடத்திற்கு ஒரு முறை மாசி மாதத்தில் ஒரு நாள் அதிகரிக்கும்.

**35.**




இக்காகித தாளினை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம்?

1. 2. 3.




**36.**




பாத்திரம் B யினால் எத்தனை தடவைகள் விடும் போது பாத்திரம் A நிரம்பும்?

1. 10    2. 8    3. 12

**37.** நிறந் தீட்டப்பட்ட பகுதியின் பின்னம் என்ன?



1. 8/16    2. 1/2    3. 4/8

**38.** நிறந் தீட்டப்படாத பகுதியை தசம தானத்தில் எழுதும் சரியான முறை?

1. 0.8    2. 0.5    3. 0.4

**39.** சரியான கணிதக் கோவையினைத் தெரிவு செய்க.

1. 8+8+8+88+888 = 1000
2. 8+8+88+88+88 = 1000
3. 8+8+88+88+888 = 1000

**40.** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. மாலா மாலை வேளைகளில் தெற்குத் திசை நோக்கிச் செல்லும் போது அவளது இடது பக்கம் நிழல் விழுந்தது.
2. நாளை மறுதினம் புதன்கிழமை எனின், நேற்று முன்தினம் சனிக்கிழமையாகும்.
3. மே மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை எனின் ஜீன் முதலாந் திகதி திங்கட்கிழமை

**01.** பின்வரும் பந்தியை வாசிக்க.

ஆதிகாலத்தில் திறந்த வெளிகளில் மனிதர்கள் வசித்து வந்தார்கள். பின்னர் குகைகளில் வசிக்கக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் கற்களைக் கூர்மையாக்கி அதை ஒரு தற்காப்பு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தார்கள். அந்தக் கூர்மையான கல் ஆயுதமே மனிதர்களின் முதல் எழுதுகோலாகும். அந்தக் கூரியகல்லை எழுதுகோல்களைப் போல் பயன்படுத்தி தாங்கள் வசித்த குகைச் சுவர்களில் சித்திரங்களை வரைந்தார்கள். அந்த சித்திரங்கள் அவர்களின் தினசரி வாழ்க்கையையும் வேட்டையில் அடைந்த வெற்றிகளையும் குறிப்பிடுவதாக அமைந்தன.

* **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

i) ஆதிகாலத்தில் மனிதர்கள் எங்கு வசித்து வந்தார்கள்?
..............................................................................................

ii) மனிதர்களின் முதல் எழுதுகோல் எது?
..............................................................................................

iii) ஓவியங்கள் என்பதன் ஒத்தகருத்துடைய சொல்லைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
..............................................................................................

iv) விசிறியும் மடக்கேறும் இடம்பெற்றுள்ள வினையெச்சச்சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.
..............................................................................................

v) தற்காப்பு என்பதைப் பிரித்து எழுதுக.
..............................................................................................

vi) பந்தியிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.
..............................................................................................

**02.** பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள்ளே அடையாளம் இடுக.

i) ஆவுக்கு நிரை போல ஆட்டுக்கு கூட்டம் ( )
ii) நரி ஊளையிடுவது போல மயில் அகவும் ( )

**03)** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

i) சூரிய ஒளியிலுள்ள ஏழு நிறங்களையும் கொண்டதாக .............................. காட்சி தருகின்றது. (வானவில் / வாணவில்)

ii) பரிசளிப்பு விழா தொடர்பான .......................... எல்லாப் பெற்றோர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ( அழைப்பிதள் / அழைப்பிதழ்)

**04)** தடித்த எழுத்திலுள்ள சொல்லின் கருத்தை எழுதுக.

i. **வனம் போ**! என்று தந்தை சொன்னதை நான் மறப்பது தகுமா?
..............................................................................................

ii. சிலர் கூறும் **கட்டுக்கதைகளை** நம்பி ஏமாறுதல் கூடாது
..............................................................................................

**05)** கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

பூ இலங்கும் பொழில் இலங்கும் பொன் இலங்கும் என்றும்
புகழ் இலங்கும் வளம் இலங்கும் பூதரமும் இலங்கும்
.............................................................................. குன்றாத்
திரு இலங்கும் தரு இலங்கும் தென் இலங்கை நாடு

**06)** கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

# மக்கள் சட்டத்தை மறந்தால் பயண தடை தொடரும்!

## - பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து



கொழும்பு, ஜூன் 18

"பயணக் கட்டுப்பாடுகளை மக்கள் மீறும் நிலை நீடித்தால் பயணத் தடையையும் நீடிக்கவேண்டிய நிலை ஏற்படும்."

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தனிமைப்படுத்தல் சட்டத்தையும், பயணக் கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் உரிய வகையில் பின்பற்றுமாறு நாட்டு மக்களிடம் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம். எனினும், சட்ட திட்டங்களை மீறிச் செயல்படும் சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

எனவே, பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் மக்கள் உரிய வகையில் செயற்படுவார்களா என்ற அச்சநிலை உருவாகியுள்ளது. நடைமுறைகளை மக்கள் தொடர்ச்சியாக மீறினால் பயணக் கட்டுப்பாட்டை மேலும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என்ற பரிந்துரை முன்வைக்கப்படும். இதைவிட வேறு வழியில்லை" - என்றார். (இ)

---

### காஸ்' சிலிண்டர்களை பதுக்கினால் '1977' இற்கு உடனடியாக அழைப்பு

கொழும்பு, ஜூன் 18

சமையல் எரிவாயு சிலிண்டர்களை வியாபார நிறுவனங்கள் பதுக்கி வைத்தால் அது தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடு முன்வைக்க முடியும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க வேண்டும் என லாப் மற்றும் லிட்ரோ காஸ் நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. லாப் நிறுவனம் 740 ரூபாயால் அதிகரிக்குமாறும், லிட்ரோ காஸ் நிறுவனம் 670 ரூபாயால் விலையை அதிகரிக்குமாறும் கோரியுள்ளதாக எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழு உறுப்பினர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்நிலையில், சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்படும் என்பதால் அதனைப் பதுக்கி வைக்கும் முயற்சியும் இடம்பெறுகின்றது. இந்நிலையிலேயே அதுபற்றி முறைப்பாடு செய்ய இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (இ)

# ஐந்து பேருக்கு ஒரு தொற்றாளர் இலங்கையின் நிலைமை மோசம்

## அரச மருத்து அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 18**

**"இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 5 தொடக்கம் 10 பேருக்கு ஒரு தொற்றாளர் அடையாளம் காணப்படும் நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் குணமடைந்து வீடு செல்பவர்களின் வீதமும் சரிவடையத் தொடங்கியுள்ளது. இது ஆபத்தான போக்கு என்பதை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்."**



- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் புத்தாண்டு கொத்தணிக்கு முன்னர், அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் உயிரிழப்போரின் சதவீதம் 0.4 ஆக இருந்தது. புத்தாண்டுக் கொத்தணி ஆரம்பித்த காலத்தில் இது 0.6 சதவீதமாக இருந்தது. தற்போது நேற்றுமுன்தினம் இது ஒரு சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும், புத்தாண்டுக் கொத்தணிக்கு முன்னர் வரையில் தொற்றுக் குணமடைந்து வீடு செல்வோரின் சதவீதம் 88 ஆகக் காணப்பட்டது.

தற்போது 84 சதவீதமாக அது குறைவடைந்துள்ளது. இவை எல்லாம் ஆபத்தான போக்கையே காண்பிக்கின்றன" - என்றார். (இ)

---

# இணையவழி ஊடாக மது விற்பனைக்கு கொரோனா செயலணி அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 18

இணையவழி ஊடாக மதுபானங்களை விற்பனை செய்வதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி அனுமதி மறுத்துள்ளது என அதன் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாட்டால் நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் இணையம் ஊடாக மதுபானங்கள்



விற்பனை செய்வதற்குக் கலால் திணைக்களம் திட்டமிட்டது. இதற்கு நிதி அமைச்சும் கொள்கை ரீதியில் அனுமதி வழங்கியது.

எனினும், இந்தத் திட்டத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட பல தரப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

இதனையடுத்து கொரோனாத் தடுப்புக்கான செயலணி அனுமதி வழங்கினால் மட்டுமே குறித்த சேவை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எனினும், அதற்கான அனுமதியை வழங்க குறித்த செயலணி மறுத்துள்ளது. (இ)

# களவாடப்பட்ட தடுப்பூசிகள்: தீவிர விசாரணை ஆரம்பம்



கொழும்பு, ஜூன் 18

காலி - ஹபராதுவ பகுதியில் சீனத் தயாரிப்பான 'சினோபார்ம்' தடுப்பூசிகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 30 தடுப்பூசிகளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன எனவும், அவற்றின் பெறுமதி 90 ஆயிரம் ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரியால் ஹபராதுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பணியாற்றிய சாரதி மற்றும் ஊழியர் ஒருவர் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை மேற்கொள்வதற்கு காலி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால், காலி குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (இ)

---

# பால்மாக்களின் விலையை 350 ரூபாயால் அதிகரிக்குக!

## இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 18

இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பால்மாக்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், நுகர்வோர் அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

உலக சந்தைகளில் பால்மாக்களின் விலை மற்றும் கப்பல் கட்டணம் அதிகரித்துள்ளதாலேயே இவ்வாறானதொரு கோரிக்கையை விடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மேற்படி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி 400 கிராம பால்மாவின் விலையை 140 ரூபாயாலும், ஒரு கிலோ பால்மாவின் விலையை 350 ரூபாயாலும் அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

எனினும், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் விலை அதிகரிப்புக்கு இடமளிக்கப்படமாட்டாது என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ)

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை: இன்று கையளிக்கின்றது சஜித் அணி

கொழும்பு, ஜூன் 18

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையெழுத்து திரட்டும் நடவடிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் தொடக்கம் ஆரம்பித்த நிலையில் நேற்றும் எம்.பிக்கள் சிலர் கையொப்பமிட்டுள்ளனர்.


குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரின் கூற்றின்படி அமைச்சரவையின் அனுமதியின்றி வலுசக்தி அமைச்சர் தன்னிச்சையாக எரிபொருட்களின் விலையை அதிகரித்தமை, கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தியமை உட்பட 10 காரணங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்பனவும் ஆதரவு வழங்கவுள்ளன என்று தெரியவருகின்றது.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் உள்ள பஸில் ஆதரவு உறுப்பினர்கள் சிலர் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்காவிட்டாலும் நடுநிலை வகிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)




# உருகத் தொடங்கியது ஆட்டிக் பனிப்பாறை!

## கடல் மட்டம் உயரும் அபாயம்

பெர்லின், ஜூன் 18


ஆட்டிக் பனிப்பாறை உருக ஆரம்பித்து விட்டது என்று அந்தப் பகுதியில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் குழுவின் தலைவர் மார்க்ஸ் ரெக்ஸ் தெரிவித்துள்ளார்.

புவி வெப்பமடைவதால் ஆட்டிக் பனிப்பாறை உருகும் அபாயம் குறித்து ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், கோடை காலத்தில் ஆட்டிக் பிராந்தியத்தில் உருகிய ஐஸ் பாளங்கள் இப்போது மறைந்துள்ளன. பனி உருகுவதன் முதல் அடையாளம் என்று அவர் கூறியுள்ளார்.

பனிப்பாறைகள் அடங்கிய சுரங்கப் பகுதியின் முனைகள் உருகத் தொடங்கியுள்ளது. இதனால் பனி உருகி கடல் மட்டம் உயரும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றும் மார்க்ஸ் ரெக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்டிக் பிராந்தியத்தின் வடதுருவத்தில் 20 நாடுகளை சேர்ந்த 300 விஞ்ஞானிகள் பேராசிரியர் ரெக்ஸ் தலைமையில் ஆராய்ச்சி மேற்கொண்டனர். இந்தக் குழுவினர் இப்பகுதியில் 389 நாள்கள் ஆராய்ச்சி செய்து கடந்த ஆண்டு ஒக்ரோபரில் ஜேர்மனி திரும்பினர். இன்னும் சில ஆண்டுகளில் பனிப் பாறைகள் இல்லாத ஆட்டிக் கடல் பகுதி உருவாவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் ரெக்ஸ் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கங்கை ஆற்றில் பெட்டியில் மிதந்து வந்த பெண் குழந்தை!





புதுடில்லி, ஜூன் 18

இந்தியாவின் - உத்தர பிரதேச மாநிலம் காசிப்பூர் பகுதியில் கங்கை நதியில் பெட்டியில் மிதந்து வந்த 21 நாள் குழந்தையை அந்தப் பிரதேசத்தை சேர்ந்த படகோட்டி ஒருவர் மீட்டு அரசிடம் ஒப்படைத்துள்ளார்.

சிவப்பு நிற துண்டால் சுற்றப்பட்ட அந்த பெண் குழந்தை இந்து தெய்வங்களின் படங்கள் கொண்ட பெட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆற்றில் மிதந்து வந்தது.

குழந்தையின் அழுகையை கேட்ட குல்லு சவுத்ரி என்ற படகோட்டி பெட்டியிலிருந்த குழந்தையை மீட்டுள்ளார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தை சிகிச்சையின் பின் காப்பகத்தில் சேர்க்கப்பட்டது.

குழந்தையை பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அந்தக் குழந்தை பிறந்த திகதி மற்றும் நேரம் குறிப்பிட்ட அட்டை ஒன்றும் பெட்டியில் இருந்தது. மேலும் அந்த குழந்தையின் பெயர் கங்கா என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தக் குழந்தையை வளர்ப்பதற்கான செலவை மாநில அரசே ஏற்கும் என உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜோ பைடன் - புடின் சந்திப்பு: தீர்க்கமான முடிவின்றி நிறைவு!



ஜெனிவா, ஜூன் 18

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோரின் சந்திப்பு சில இணக்கங்களுடன் நிறைவுற்றது.

அத்துடன், இணையப் பாதுகாப்பு, ஆயுதக் கட்டுப்பாட்டு விவகாரங்கள் குறித்து தொடர்ந்து பேசுவதற்கும் இரு நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற ஜோ பைடன் தனது முதல் வெளிநாட்டு பயணத்தை கடந்த வாரம் தொடங்கினார். ஜி-7, நேட்டோ மாநாடுகளில் அவர் பங்கேற்றார். இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஜெனிவாவில் ரஷ்ய ஜனாதிபதி புடினை முதன்முறையாக சந்தித்துப் பேசினார். 5 மணி நேரத்துக்கு திட்டமிடப்பட்ட இந்த சந்திப்பு 3 மணி நேரங்களிலேயே நிறைவுக்கு வந்தது.

இதன்போது, இரு நாடுகள் இடையிலான நல்லுறுவு, அமெரிக்க அரசு அலுவலகங்கள் மீதான ரஷ்யாவின் சைபர் தாக்குதல், ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் உக்ரைனில் ரஷ்யாவின் ஊடுருவல் உள்ளிட்டவை குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். இதில், முக்கியத்துவம் வாய்ந்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்பின்போது ரஷ்யாவை எந்த வகையிலும் அச்சுறுத்தவில்லை என பைடன் தெரிவித்தார். எனினும், இணைய பாதுகாப்பு உள்ளிட்ட அமெரிக்க நலன்களை பைடன் கோடிட்டுக் காட்டினார் என்றும் இந்த விடயத்தில் ரஷ்யா மீண்டும் தவறிழைத்தால் அதற்கு அமெரிக்க பதிலடி கொடுக்கும் என்று புடினுக்குத் தெளிவுபடுத்தினாரென பைடன் கூறினார்.

இந்தப் பேச்சு தொடர்பில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய இரு நாடுகளின் தலைவர்களும் தங்கள் வார்த்தைகளை மிகக் கவனமாகக் கையாண்டனர். இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாகவும் அடுத்த கட்ட நகர்வுகளை நோக்கியதாகவும் அமைந்ததாகவும் இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் கூறினர்.

இதேவேளை, அமெரிக்க - ரஷ்யா இடையிலான பனிப்போரை அடுத்து மீள அழைக்கப்பட்ட இரு நாடுகளின் தூதுவர்களையும் மீளவும் அனுப்பி வைக்க இரு தலைவர்களும் இணங்கினர்.

கடந்த மார்ச் மாதத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினை கொலையாளி என பைடன் விமர்சித்ததை அடுத்து இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர மோதல்கள் ஆரம்பமாகின. இதனையடுத்து அமெரிக்காவுக்கான தனது தூதரை ரஷ்யா திரும்பப் பெற்றது. தொடர்ந்து மொஸ்கோவுக்கான தனது தூதரை அமெரிக்காவும் திரும்ப அழைத்தது. இந்நிலையில் தன்னை கொலையாளி என அழைத் தமை குறித்து பைடன் அளித்த விளக்கத்தால் தான் திருப்தியடைந்தாரென நேற்றைய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய புடின் கூறினார்.

எனினும், மனித உரிமைகள் தொடர்பான பிரச்னைகளில் இரு நாடுகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் தொடர்வதையும் புடின் மறைக்கவில்லை. சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி உயிருக்கு ஆபத்து ஏற்படுமானால் ரஷ்யா மோசமான விளைவுகளை எதிர்கொள்ளும் என சந்திப்பின் பின்னர் பைடன் தெரிவித்தார்.

ரஷ்யாவில் இருந்து அமெரிக்கா மீது தொடுக்கப்படும் இணையவழித் தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரஷ்யாவைக் கோரியுள்ளதாகவும் பைடன் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் விரும்பும் கடைசி விடயமாகப் பனிப்போர் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவர் அமெரிக்காவுடன் மீண்டும் ஒரு பனிப்போரை நடத்த விரும்புகிறார் என்று நான் நினைக்கவில்லை. தற்போது இருக்கும் சூழலில் மீண்டும் ஒரு பனிப் போர் என்பது யாருடைய நலனுக்கும் நல்லதல்ல எனவும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்தார்.

இதேவேளை, வழமையான அரச தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பின்போதான பாரம்பரியங்களைப் போன்று புடினை அமெரிக்கா வருமாறு பைடன் அழைப்பு விடுக்கவில்லை. இதனை செய்தியாளர் சந்திப்பின்போது புடின் சுட்டிக்காட்டினார். அவர் என்னை வாஷிங்டனுக்கு அழைக்கவில்லை என்று புடின் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீன ஆதிக்கத்துக்கு மாற்றா ரஷ்யா?

## பைடன் - புடின் சந்திப்பு குறித்து வல்லுநர்கள் கருத்து

வாஷிங்டன், ஜூன் 18

சீனாவின் ஆதிக்கத்துக்கான மாற்றாகவே ரஷ்யாவை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க, ரஷ்ய ஜனாதிபதிகள் ஜெனிவாவில் நேற்று முன்தினம் சந்தித்தனர். இந்த சந்திப்பு தொடர்பில் வல்லுநர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சீனாவின் ஆதிக்கத்துக்கு மாற்றாக ரஷ்யாவை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆதரிக்கிறார். அவர் ரஷ்யாவை நேரடிப் போட்டியாளராகக் கருதவில்லை என்றும், சீன வணிக ஆதிக்கம் மேலோங்கி வரும் நிலையில், அதற்கு மாற்றாக ரஷ்யாவை ஆதரிக்கும்படி நட்பு நாடு களைத் தூண்டுகிறார் என்று அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். (ஐ)



# 3 வீரர்களுடன் விண்ணில் பாய்ந்தது ஷென்சோ - 12

பீஜிங், ஜூன் 18

சீனா விண்வெளியில் சொந்தமாக அமைத்துவரும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் கட்டுமான பணிகளுக்காக 3 விண்வெளி வீரர்கள் நேற்று சென்றனர். இவர்கள் ஷென்சோ -12 விண்கலம் மூலமாக நிலையத்துக்கு சென்றனர்.

வடமேற்கு சீனாவின் கோபி பாலைவனத்தில் உள்ள ஜூகுவான் செயற்கைக் கோள் ஏவுதளத்தில் இருந்து பீஜிங் நேரப்படி காலை 9:22 மணிக்கு இந்த விண்கலம் ஏவப்பட்டதாக சீன விண்வெளி நிறுவனம் (CMSA) தெரிவித்துள்ளது. விண்வெளியில் 'தியாஹே' என பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி நிலையத்திற்கான மைய பகுதியை கடந்த ஏப்ரல் 29ஆம் திகதியன்று சீனா விண்ணில் செலுத்தியது.

விண்வெளி நிலையத்துக்கு பயணிக்க முன்னர் விண்வெளி வீரர்கள் அனைவரும் பொதுமக்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டனர். கூடி இருந்த பொதுமக்கள் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். அங்கு குழுமியிருந்த சிறுவர்கள் விண்வெளி வீரர்களிடம் கற்றுக்கொள்கிறோம் என சீன மொழியில் முழங்கினர்.

இதனையடுத்து ஷென்ஜோ -12 விண்கலம் 3 விண்வெளி வீரர்களையும் தாங்கியவாறு விண்ணுக்கு செலுத்தப்பட்டது. விண்வெளி மையத்திற்கு செல்லும் மூவரும் சுமார் 3 மாதங்கள் சீன விண்வெளி நிலையத்தில் தங்கி இருப்பர். இந்த நடவடிக்கை விண்வெளி ஆய்வில் புதிய மைல்கல் என சீனா தெரிவித்துள்ளது. (ஐ)



## இத்தாலி கிண்ணம் வென்றால் நிர்வாணமாக தோன்றுவேன்!

### இத்தாலியின் பிரபல நடிகை

ரோம், ஜூன் 18

இத்தாலி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியதைத் தொடர்ந்து இத்தாலியின் பிரபல நடிகை சப்ரினா பெரிலி நீச்சல் உடையில் தோன்றினார்.

யூரோ கிண்ணத்தை கடந்த 25 ஆண்டுகளாக இத்தாலி வெல்லவில்லை. இந்த நிலையில், இம்முறை கிண்ணத்தை வென்றால் நடிகை சப்ரினா பெரிலி நிர்வாணமாக தோன்றுவதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இரண்டாவது சுற்றுக்கு முதல் அணியாக இத்தாலி நுழைந்தது. இதையடுத்தே ரசிகர்கள் முன்பாக நீச்சல் உடையில் தோன்றினார் சப்ரினா.

ஐரோப்பிய சம்பியன்ஷிப்பை வென்றால் இத்தாலிய வீரர்கள் முன் ஆடையில்லாமல் தோன்றுவதாக இத்தாலிய நடிகை சப்ரினா பெரிலி உறுதி அளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெடரர் அதிர்ச்சி தோல்வி!

முன்னிலை வீரரான ரோஜர் பெடரர் கனடாவின் பெலிக்ஸிடம் அதிர்ச்சி தோல்வியை தழுவினார்.

ஜேர்மனியின் ஹாலேயில் நடக்கும் சர்வதேச ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில், இரண்டாவது சுற்றில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் கனடாவின் பெலிக்ஸ் அஜர் அலியஸ்சிம்மை எதிர்கொண்டார்.

இதில், 4-6, 6-3, 6-2 என்ற செற் கணக்கில் பெலிக்ஸ் வெற்றி பெற்றார்.

எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகும் விம்பிள்டன் தொடருக்கு பெடரருக்கு இது பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது. (ஐ)

### உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்:

## இறுதிப் போட்டி இன்று ஆரம்பம்!



சௌதாம்ப்டன், ஜூன் 18

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது. இங்கிலாந்தின் சௌதாம்படனில் நடக்கும் இந்தப் போட்டியில் நியூஸிலாந்து - இந்திய அணிகள் மோதுகின்றன.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை அறிமுகப்படுத்தியது. கடந்த 2019 ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமான இந்தத் தொடரில் 9 நாடுகள் பங்கேற்றன.

புள்ளிகள் அடிப்படையில் முதலிரு இடங்களைப் பெறும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், கொரோனா பேரிடரால் தொடர் பாதிக்கப்பட்டது. இதனால், இறுதிப் போட்டிக்கு நுழையும் முறையும் மாற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து நியூஸிலாந்து, இந்திய அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இது இரு அணிகளும் மோதும் 60ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதில் 21 போட்டிகளில் இந்தியாவும், 12 போட்டிகளில் நியூஸிலாந்தும் வெற்றி பெற்றன. 26 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன.

இந்தப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) தொடங்குகிறது.

விளையாடும் பதினொருவர் அணி.

**இந்தியா (உத்தேச அணி)** - விராட் கோலி (தலைவர்), ரோஹித் சர்மா, ஷுப்மன் கில், செதேஷ்வர் புஜாரா, அஜிங்க்ய ரஹானே, ரிஷப் பந்த், ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஸ்வின், இஷாந்த் சர்மா, முஹமட் சமி, ஜஸ்பிரீத் பும்ரா.

**நியூஸிலாந்து (உத்தேச அணி)** - கேன் வில்லியம்ஸன் (தலைவர்), டெவன் கொன்வே, ரொம் லதம், றோஸ் ரெய்லர், ஹென்றி நிக்கோல்ஸ், வட்லிங், கொலின் டி கிராண்ட்ஹோம், கெய்ல் ஜமைசன், ரிம் சௌதி, நெய்லி வோங்கர் ஃ அஜாஸ் பட்டேல், ட்ரென்ட் போல்ட். (ஐ)

### யூரோ கிண்ணத் தொடர்:

## இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது இத்தாலி!



ரோம், ஜூன் 18

சுவிற்சர்லாந்து அணியை 0 -3 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய இத்தாலி இரண்டாவது சுற்றுக்கு (knockout round) முதல் அணியாக முன்னேறியது.

16ஆவது யூரோ கிண்ணத் தொடர் ஐரோப்பிய நாடுகளில் நடக்கிறது. 24 அணிகள் பங்கேற்றுள்ள இந்தத் தொடரில் இரண்டாவது சுற்றுக்கு 16 அணிகள் தகுதி பெறும்.

ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டியில் நேற்று முன்தினம் இத்தாலி - சுவிற்சர்லாந்து அணிகள் மோதின.

இதில், 26 மற்றும் 52ஆவது நிமிடங்களில் இத்தாலி வீரர் இமானுவேல் லோகடெல்லி இரண்டு கோல்களை அடித்து அசத்தினார்.

ஆட்டத்தின் இறுதியில் சிரோ இம்மோபைல் ஒரு கோல் அடித்தார். இதனால் 3 - 0 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்தை, இத்தாலி அணி எளிதாக வீழ்த்தியது. (ஐ)

### யூரோ கிண்ணத் தொடர்!

## ஜேர்மனியின் சுயகோலால் பிரான்ஸ் அணி வென்றது!



முனிச், ஜூன் 18

யூரோ உதைபந்தாட்டத் தொடரில் பிரான்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் தனது வீரரே அடித்த கோலால் வீழ்ந்தது ஜேர்மனி. யூரோ கிண்ண வரலாற்றில் முதல் போட்டியில் ஜேர்மனி தோற்பது இதுவே முதன் முறையாகும். யூரோ கிண்ணத் தொட ரில் எவ் பிரிவில் இடம் பெற்றுள்ள ஜேர்மனி - பிரான்ஸ் அணிகள் முனிச் நகரில் நேற்றுமுன்தினம் மோதின.

20ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் போல் போக்பா கடத்தி கொடுத்த பந்தை லூகாஸ் ஹெர்னாண்டஸ் கோல்வலைக்கு அருகே நின்ற கிளியான் பாப்பேயிடம் தட்டினார். இதை ஜேர்மனி வீரர் மேட்ஸ் ஹம்மல்ஸ் இடைமறிக்க முயன்றார். ஆனால், பந்து அவரின் காலில் பட்டு கோல் கோலாகி விட்டது.

விறுவிறுப்பாக நடந்த இந்த போட்டியில் போட்டி முடிவடையும் வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இறுதியில், பிரான்ஸ் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

### 2025 சம்பியன்ஸ் கிண்ணம்:

## தொடரை நடத்துவதற்கு பங்களாதேஷ் விருப்பம்!

டாக்கா, ஜூன் 18

2025ஆம் ஆண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை நடத்துவதற்கு பங்களாதேஷ் விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொடருக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தங்களால் செய்ய முடியும் என்று அந்த நாட்டின் கிரிக்கெட் சபை தலைவர் நஜ்முல் ஹசன் கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை ஐ.சி.சி. 1998ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. இதுவரை 8 போட்டிகள் நடந்துள்ளன.

இந்த நிலையில், 2025ஆம் ஆண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை பங்களாதேஷ் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. 1998ஆம் ஆண்டு அறிமுக ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை பங்களாதேஷ் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பயணத் தடை நீடிக்கப்படுமா?

## இன்று முக்கிய தீர்மானம்

கொழும்பு, ஜூன் 18

நாடு முழுவதும் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை நீடிக்கப்படுமா அல்லது தளர்த்தப்படுமா என்பது குறித்து இன்று இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை இன்று சந்திக்கவுள்ள கொரோனா பணிக்குழு தற்போதைய நிலைமையை மறுஆய்வு செய்து இந்த விடயம் குறித்து தீர்மானிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை,நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டை நீக்குவது குறித்து தீர்மானிக்க பல வாரங்களாகும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



எதிர்வரும் 21ஆம் திகதியின் பின்னர் பயணக்கட்டுப்பாட்டை நீக்குவது தொடர்பாக எதிர்வரும் நாட்களில் கிடைக்கவுள்ள பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.



## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 07 - 1941



மறைவு 10 - 06 - 2021

**செல்வி செல்வி நாகநாதர் நாகம்மா**

(பிஞ்சுமணி)

யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Saint Denis ஐ வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் நாகம்மா 10-06-2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகநாதர் - தையல்முத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, குணசிங்கம் மற்றும் கணேசன்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), கலாமதி(இன்பம்), கலைவாணி(குட்டி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வடிவழகம்மா(மணி), ஜெயவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சந்திரகுமார், கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சேகர், மதுஷா, செந்தூரன், சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு அத்தையும்,கௌதமன், ஜனகன், கௌரீசன், சௌமியா, யஸ்மியா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும்,ஹெலேனா, ஆர்ஷன், அனா, ஆரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

**நிகழ்வுகள்**

**பார்வைக்கு**
Get Direction
Wednesday, 16 Jun 2021 3:00 PM - 4:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**பார்வைக்கு**
Get Direction
Sunday, 20 Jun 2021 10:30 AM - 11:30 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**கிரியை**
Get Direction
Tuesday, 22 Jun 2021 9:00 AM - 11:00 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**தகனம்**
Get Direction
Tuesday, 22 Jun 2021 11:30 AM - 12:30 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
தனலட்சுமி(தவம்)- +33650139814

**தகவல்:**
**சகோதரர்கள்.**


### வலி. கிழக்கு பிரதேச சபையால்

# உள்ளூராட்சி அதிகாரத்தைமீறிய ஆளணி நியமனங்கள் நிராகரிப்பு

## அழுத்தம் தொடர்ந்தால் நீதிமன்று செல்ல முடிவு

**யாழ்ப்பாணம், ஜூன் 18**

**உள்ளூராட்சி மன்றங்களால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியை பல்பணி அபிவிருத்தி செயலணி திணைக்களம் ஊடாக நிரப்ப முயற்சிக்கப்படுவதை வலி. கிழக்கு பிரதேச சபை நிராகரித்துள்ளது. அத்துடன், தொடர் அழுத்தம் காணப்பட்டால் நீதிமன்றம் செல்லவும் முடிவெடுத்துள்ளதாக அந்த சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.**

வலி.கிழக்கு பிரதேச விஷேட சபை அமர்வை கூட்டிய தவிசாளர் வடக்கு மாகாண திணைக்களங்களில் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தில் பயிற்சி பெற்ற 105 பேரை ஆரம்பநிலை சேவை தேவையின் நிமிர்த்தம் தற்காலிக அடிப்படையில் உள்வாங்குவதற்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பிரதம செயலாளர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் 40 பயிலுநர்களை முதற்கட்டமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது. இது தொடர்பில், யாழ். மாநகர சபைக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு அதன் பிரதிகள் ஏனைய பிரதேச சபைகளுக்கும் முகவரியிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் நியமன கடிதங்கள் எதுவும் அற்ற நிலையில் குறித்த பயிலுநர்கள் பிரதேச சபைகளுக்கு அனுப்பப்பட்டனர். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு மூன்று பயிலுநர்கள் அனுப்பப்பட்டனர்.

எமது சபைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பகுதி பகுதியாக நாம் உரிய அனுமதிகளைப் பெற்று நேர்முகத் தேர்வுகளை நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர் விபரங்களையும் பகிரங்கப்படுத்திவிட்டோம். ஆனால், அந்த நியமனங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி தேவை என வடக்கு மாகாண சபை கருதியமையால் அங்கு அனுப்பப் பட்டிருக்கின்றது. நியமனத்திற்குத் தெரிவானவர்கள் நியமனத்தை விரைவுபடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளனர்.

ஆனால், எமது சபையில் பணியாற்றியவர்களுக்கு வேலை வாய்ப்பு முதலில் வழங்கப்பட வேண்டும். அவர்களை நாம் தூக்கியெறிய முடியாது.

எம் மீது தொடர் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால் நீதிமன்றம் செல்லவேண்டியேற்படும் என்று தவிசாளர் கூறி இதைத் தொடர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தவிர சகல கட்சிகளும் ஆதரித்தன.



# தாழ்வுபாட்டில் கரை ஒதுங்கும் ஆமைகள்

மன்னார், ஜூன் 18

மன்னார் - தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரண்டு கடலாமைகள் காயங்களுடன் கரையொதுங்கியுள்ளது.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருட்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருட்கள் மன்னார் கடற்கரைப் பகுதிகளில் கரை ஒதுங்கியுள்ளன.

இந்த நிலையில் கடுமையான காயங்களுடன் நேற்று காலை 2 கடலாமைகள் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளன.

அவற்றில் ஒரு கடலாமை உயிரிழந்துள்ளதோடு மற்றைய கடலாமை உயிருடன் காணப்படுகின்றது. கடற்படையினர் குறித்த கடலாமைகள் கரை ஒதுங்கியமை தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

அண்மையில் வங்காலை மற்றும் சிலாபத்துறை கடற்கரைப் பகுதிகளிலும் கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் தொடரும் யானைகளின் அட்டகாசம்!

முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு பாலை பாணி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு காட்டு யானைகளால் பதினைந்து ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலைப்பாணிக் கிராமத்தின் பிள்ளையார் குளத்தின் கீழ் இவ்வாண்டு 30 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த வயல் நிலங்களுக்குள் புகுந்த காட்டு யானைகள் பெருமளவான ஏக்கர் வயல் நிலங்களை சேதப்படுத்தியுள்ளன.

இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் குறித்த பிரதேசத்துக்கு யானை வேலிகளை அமைத்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை தமது பகுதிக்கான யானை வேலிகள் அமைத்து தரவில்லை என்றும் இதனால் இவ்வாறு தொடர்ச்சியாக அழிவுகளை சந்தித்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர் .

# திருச்சி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் போராட்டம்!

சென்னை, ஜூன் 18

தமிழ் நாடு திருச்சி மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் தொடர்ந்து 9 ஆவது நாளாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் சிறையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 78 ஈழத்தமிழ் அகதிகள் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை தங்கள் விடுதலையை வலியுறுத்தி போராட்டத்தை ஆரம்பித்தனர்.

குறித்த போராட்டம் 9 ஆவது நாளாக நேற்று வியாழக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமது விடுதலை குறித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட ஈழத்தமிழர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

## யாழ். பல்கலை...

மருத்துவபீட கொரோனா பரிசோதனை ஆய்வு கூடத்தின் தேவைகருதி, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி இந்த அன்பளிப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இந்த தானியங்கி ஆர். என்.ஏ பிரிப்பு இயந்திரத்தை பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு, நேற்று பி.ப. 3 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, இயந்திரத்துக்கான ஆவணக் கோப்பை, மருத்துவ பீடாதிபதி மருத்துவத் துறைப் பேராசிரியர் எஸ்.ரவிராஜூடன் இணைந்து ஒட்டுண்ணியல் துறைத் தலைவர் மருத்துவர் ஏ.முருகானந்தனிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் திருமதி கலாமதி முருகானந்தன், உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கண்ணதாசன், மருத்துவ பீட மூத்த உதவிப் பதிவாளர் எஸ். ரமேஷ் மற்றும் கொரோனா பரிசோதனை ஆய்வு கூடத்தின் மருத்துவ ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

தானியங்கி ஆர். என். ஏ பிரிப்பு இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கிய புலம்பெயர் தமிழரான சுப்பிரமணியம் கதிர்காமநாதன் மற்றும் அதனை ஏற்பாடு செய்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ் நிலை வழியாக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வடமாகாணத்தில்...

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 44 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 599 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில்,

**யாழ்.மாவட்டத்தில்**
**23 பேருக்குத் தொற்று**

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர்,

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 02 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 09 பேருக்குத் தொற்று

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர்,

கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

**வவுனியா மாவட்டத்தில்**
**06 பேருக்குத் தொற்று**

வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர்,

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 பேருக்குத் தொற்று

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

**மன்னார் மாவட்டத்தில்**
**02 பேருக்குத் தொற்று**

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர் ஆகியோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 18 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 118 பேருக்கு நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில்,

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர் (10 மாத பெண் குழந்தையும், 07 வயது சிறுவனும் உள்ளடக்கம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 08 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தமிழரின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேற்று நேரில் உறுதியளித்தார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையில் நேற்று பகல் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்படி வாக்குறுதியை வழங்கினார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்ற சூழலில் இந்தத் திடீர் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன் தினம் சந்திப்பு நடத்த இருந்தது. இருப்பினும் அது இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது. இந்தநிலையில், கொழும்பில் முகாமிட்டிருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்தியத் தூதுவருடனான நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி, புதிய அரசமைப்பு, அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட தமிழ் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் இதன்போது பேசப்பட்டன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

## சச்சிதானந்தத்திடம்...

மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தினார்கள்.

தயாரித்துக் கொண்டு வந்திருந்த வினாக்கொத்து ஒன்றினைக் கொண்டு 22க்கும் கூடுதலான கேள்விகளை மறவன்புலவு சச்சிதானந்தத்திடம் தொடுத்தனர். அதற்கான பதில்களைப் பெற்று பதிந்து சென்றுள்ளார்கள். இந்த விசாரணைகள் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு நீடித்தது.

சிவசேனை அமைப்புக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தொடர்பு இருக்கிறதா? என்ற கோணத்திலும் அவர்கள் விசாரணை அமைந்தது. இதுவரை காலம் சிவசேனை வெளியிட்ட நூல்கள் தட்டிகள் சுவரொட்டிகள் யாவற்றையும் ஒவ்வொன்றாகக் காட்டிய மறவன்புலவு க.சச்சிதானந்தன், ஒவ்வொரு படியை எடுத்துச் செல்லுமாறு அவர்களுக்குக் கொடுத்த போது அவற்றின் படங்கள் தம்மிடம் இருப்பதாக கூறி எடுத்துச் செல்ல மறுத்து விட்டனர்.

பசுவதைத் தடைச் சட்டக் கோரிக்கை தொடர்பாக இதுவரை சிவசேனை நடத்திய போராட்டங்கள் யாவற்றையும் விளக்கமாகக் கேட்டறிந்துகொண்டனர்.

## 2,361 பேருக்கு...

களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து இலட்சத்து 33 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 434 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 245 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# ஜூன் 21இல் பயணத்தடை தளரும் சாத்தியம் குறைவு

கொழும்பு, ஜூன் 18

இலங்கை முழுவதும் பயணக் கட்டுப்பாடு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் மக்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படுமாக இருந்தால் நாடு இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் என்று அவர்கள் அரசுக்கு அறிவித்துள்ளனர்.

இதனால் இப்போதுள்ள நிலையில் பயணத் தடையை மேலும் இருவார காலம் நீடிப்பதைத் தவிர மாற்று வழியில்லை என்றும் சுகாதார நிபுணர்கள் அரசிடம் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 21ஆம் திகதியுடன் தளர்த்த அரசு ஆராய்ந்து வருகின்ற நிலையில், கொரோனா செயலணிக் கூட்டங்களிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 24ஆம் திகதி பொஷன் பண்டிகை என்றபடியால் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 21ஆம் திகதி பயணக் கட்டுப்பாட்டை நீடிக்க வேண்டாம் என்று அரசிடம் சுகாதார நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்போது நாட்டைத் திறக்கும் தீர்மானத்தை அரசு கைவிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

"பயணக் கட்டுப்பாட்டு காலத்தில் மக்களின் செயற்பாடுகள் திருப்தியானதாக அமையவில்லை. நாட்டில் நாளாந்த கொரோனா மரணங்களும், தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் இன்னமும் குறையவில்லை. ஆகவே, இவ்வாறான நிலையில் நாட்டை உடனடியாக திறப்பது ஆபத்தானது" என்று விசேட வைத்திய நிபுணர்கள், அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"இப்போது அரசு நாட்டைத் திறக்குமானால் அதற்கு எமது ஆதரவை வழங்க முடியாது. மக்களின் நிலைமைகளைக் கருத்தில்கொண்டு நாட்டை இன்னும் இரண்டு வார காலத்துக்கு முடக்குவதே அரசுக்கு இருக்கும் ஒரே தெரிவாகும்" என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

"நாட்டைப் பாதி திறந்தும் பாதி மூடியும் கொரோனா வைரஸ் பரவலை எவ்வாறு கட்டுப்படுத்துவது? ஆகவே, அரசு இன்னும் சற்றுப் பொறுமையாக இருந்து சுகாதாரத் தரப்பினரின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க வேண்டும்" எனவும் வைத்திய நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (இ)

# மரக்கறிகளின் விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 18

நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் மொத்த விற்பனைகளுக்காக நேற்று திறக்கப்பட்டன.

இந்நிலையில், சந்தையில் மரக்கறிகளின் விலை வெகுவாக அதிகரித்து காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சில மரக்கறி வகைகள் ஒரு கிலோ ஒன்று 200 முதல் 250 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

அதன்படி, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் போஞ்சி, கரட், லீக்ஸ் மற்றும் கோவா போன்ற மரக்கறிகள் ஒரு கிலோ கிராம் 200 முதல் 250 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான பகுதிகளில் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படும் போது 250 கிராம் மரக்கறி 80 முதல் 90 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்பட்டது.

## ஹரின் எம்.பி...

அவர்கள் விசாரித்தனர் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவரது வீட்டை சுற்றியுள்ள வீதிகளிலும் பொலிஸாரின் பிரசன்னம் இருந்தது.

பொதுமக்களை ஏற்றிய பஸ் ஒன்று அவரது வீட்டுக்கு சென்றது பற்றிய தகவல் தமக்கு கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது இல்லத்தை ஆய்வு செய்த பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

## பயண கட்டுப்பாடு...

பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

தற்போது நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களுக்கு 10 நாட்களின் பின்னர் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் 14 நாட்களின் பின்னர் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் நாட்களில் எழுமாறான பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுப்பதன் ஊடாக நாட்டின் நிலைமையை அவதானிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழில் மற்றொரு...

டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 67 வயதுடைய ஆர்.கனகம்மா என்று பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை...

இலங்கை, பகிரப்பட்ட சூழலில் கடல் சார் பாதுகாப்பு உள்ளிட்ட எங்களின் பரஸ்பர பாதுகாப்பு உட்பட எங்களின் மிகச்சிறந்த இரு தரப்பு ஒத்துழைப்பை கருத்தில்கொள்ளும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு துறை நகர திட்டம் குறித்து எங்களின் சமீபத்தைய பாதுகாப்பு அடிப்படையில் சமீபத்தைய விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகநகர கட்டமைப்பு குறித்து இலங்கையில் வெளியிடப்பட்டுள்ள கரிசனைகளை கருத்திலெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மூன்று...

சோதனை முடிவின்படி குறித்த பகுதியைத் தனிமை படுத்தலில் இருந்து விடுவிக்க சுகாதாரப் பகுதியினரால் யாழ். மாவட்ட கொரோனா செயலணிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்த வாரம் மூன்று வாரங்களுக்கு முன்னர் குறித்த பகுதியில் அதிகளவான தொழிலாளர்கள் இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அந்தப் பகுதி சுயதனிமைப்படுத்தப்பட்டு அப் பகுதியில் இருந்து யாரும் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் இன்று காலை முதல் விடுவிக்கப்படவுள்ளது. (அ-03)

ஈழநாடு
Eelanadu



# இலங்கைக்கு 2,64,000 டோஸ் அஸ்ட்ரா ஸெனகா தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூன் 18

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 'கோவக்ஸ்' திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 64 ஆயிரம் டோஸ் அஸ்ட்ரா ஸெனகா தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்கனவே அதிகாரபூர்வ கடிதத்தில் சுகாதார அமைச்சுக்கு இந்தத் தடுப்பூசிகள் வழங்குவதை உறுதிப்படுத்தியுள்ளது.

ஜூலை மாத தொடக்கத்தில் தடுப்பூசிகளை பெற முடியும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஆறு இலட்சம் பேர் அஸ்ட்ரா ஸெனகா தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுள்ள நிலையில், அவர்களுக்கு இரண்டாவது டோஸை செலுத்த வேண்டியுள்ளது. இதன்படி இலங்கைக்குக் கிடைக்கவுள்ள 2 இலட்சத்து 64 ஆயிரம் டோஸ் தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக 3 இலட்சத்து 36 ஆயிரம் டோஸ் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன.

அத்துடன், 10 இலட்சம் டோஸ் பைஸர் தடுப்பூசிகளை இலங்கையின் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. அத்துடன் அதனை அஸ்ட்ரா ஸெனகாவுக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியுமா என்பது குறித்து ஆராயப்படுகின்றது.

இந்தக் கலவையைப் பரிந்துரைக்கும் சில முடிவுகள் இருக்கின்றன என்று உலக சுகாதார ஸ்தாபனம் சமீபத்தில் கூறிய பின்னர், அஸ்ட்ரா ஸெனகா தடுப்பூசிகளை இரண்டாவது டோஸாகப் பெற வேண்டியவர்களுக்கு இது பயன்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

# நம்பிக்கையில்லா பிரேரணையில் உள்ள அனைத்து விடயங்களும் ஆதாரமற்றவை!

## எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் புண்ணியம் கிடைக்கட்டும் என்கிறார் அமைச்சர் கம்மன்பில



**கொழும்பு, ஜூன் 18**

**"வலு சக்தி அமைச்சராக தனக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உள்ள அனைத்து விடயங்களும் ஆதாரமற்றவை."**

**- இவ்வாறு வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சிறுவன் ஒருவனின் கடிதம் போன்று பல பிழைகள் கொண்ட ஓர் ஆவணமாகும். எரி பொருள் விலையை அதிகரிப்பது நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் மட்டுமே செய்ய முடியும். அமைச்சரவை அனுமதி தேவையில்லை.

நான் வலு சக்தி அமைச்சராக 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பதவியேற்றுக் கொண்டேன். ஆனால், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எனக் குறிப்பிட்டுள்ளதை எதிர்க்கட்சிக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டவர்கள் தங்களுக்குச் சட்டம் பற்றி எதுவும் தெரியாது என்பதை நாட்டுக்குக் காட்டியுள்ளனர் என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ள முடியும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற பெயரில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு புண்ணியம் கிடைக்கட்டும்" - என்றார். (இ)

# அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை தோல்வியடைவது உறுதி

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 18

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு தோற்கடித்தே தீரும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எரிபொருள் விலை அதிகரிப்பை அமைச்சர் உதய கம்மன்பில பொறுப்பேற்ற வேண்டும் என்று கூறி, எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளது. எரிபொருள் சர்ச்சையை எதிர்க்கட்சி சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றது. அரசு பிரபல்யம் இல்லாத தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அமைச்சர் ஒருவரை சிக்கலில் மாட்டிவிடுவது பொருத்தமில்லை.

அரசு மேற்கொண்ட தீர்மானத்துக்கான பொறுப்பை ஆளும் கட்சியின் அனைவரும் எடுக்க வேண்டும்.

ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 150 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கும்போது, 22 பேர் கையொப்பமிட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது வேடிக்கையாகும்" - என்றார். (இ)

# சுகாதார அமைச்சுக்குள் மோதல்: கொரோனா தடுப்புக்குத் தடை!

## பேராசிரியர் அர்ஜூன டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 18

இலங்கையின் சுகாதார அமைச்சின் குழுக்களிடையே நிலவும் பிரிவினை கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தடையாகும் என்று பேராசிரியர் அர்ஜூன டி சில்வா தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுகாதார அமைச்சின் பிரிவுகளுக்கு இடையே தொடர்புகள் குறைவாகக் காணப்படுகின்றன எனவும், ஒன்றிணைந்து பணியாற்றுவதில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையின் முன்னேற்றத்துக்கு இவ்வாறான பிரிவினைகள் தடையாக இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் தனிப்பட்ட பிரிவினைகளைத் தவிர்த்து, நாட்டு நலனுக்காகச் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சுகாதார அமைச்சு, சுகாதார திணைக்களம் போன்றவற்றுக்கு இடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன என்றும், இது கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்




7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பூமி,கைதி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- மனிதாபிமானம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு